செந்தமிழ்ச் செல்வி

LIBRARY

உள்ளுறை

	பக்கம்
பேராசிரியர் தி. செல்வக் கேசவராயருக்கும் டாக்டர் போப்பையருக்குமுள்ள தொடர்பு	௫௬௧
உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்	௫௬௯
ஆப்பிரிக்கச் சுற்றுலா	௫௭௬
சங்க இலக்கியத்தில் இரம் என்ற மரம்	௫௮0
சீகன் பால்குவின் தென்னிந்தியக் கடவுள்களின் கால்வழி	௫௨௬
இலக்கியப் பதிகம் வளர்ச்சி வரலாறு	௫௯௧
தமிழில் எழுதுவோம்	௬00
செய்திகளும் குறிப்புகளும்	௬0௭

(July '74)

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்

உ. 'சித்தாந்த கலாநிதி', உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை.

ங. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எஸ்ஸி.
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங்.
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

ரு. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்,
பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி.ஏ. (ஆனர்சு), (லண்டன்) எம் ஏ., பி.ஓ எல். (சென்னை)
கொழும்பு.

சு. புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

எ. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

கழக வழி வெளிவந்துள்ள

அரசியல் பெருமக்கள் வரலாறுகள்

உரிமையின் பரிசு (காந்தியடிகளைப் பற்றிய தொகுப்பு நூல்)	5	50
உலகப் பேரொளி (நேரு அவர்களைப்பற்றிய தொகுப்பு நூல்)	8	75
விடுதலை வீரர்கள் ஐவர் (கவியரங்கக் கவிதைத் தொகுப்பு, கவியரங்கத் தலைவர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி)	1	75
நேரு மாமா (தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்)	2	25
அமெரிக்கக் காந்தி (வண்ணப் படங்களுடன்)	3	00
அண்ணல் நேருவின் அமுத மொழிகள்	3	50
விடுதலைக் குழைத்த வீரர்கள்	4	00
கோபாலகிருஷ்ண கோகலே	2	00
லால்பகதூர்	1	50
முதலமைச்சர் காமராசர்	1	50
அரசியல் தலைவர் ஐவர்	4	00
முதற்குடியரசுத் தலைவர்	1	50
அண்ணல் ஆபிரகாம்	2	00
சிங்கத் தமிழர் சிதம்பரனார்	4	00

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௪௮	திருவள்ளுவர் ஆண்டு உ௦௦ரு, ஆனி சூலை 1974	பரல் ௧௧

பேராசிரியர் தி. செல்வக் கேசவராயருக்கும் டாக்டர் போப்பையருக்குமுள்ள தொடர்பு

பேராசிரியர் தி. செல்வக்கேசவராய முதலியார் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலே படித்து எம். ஏ. பட்டம் பெற்று அதன்கண்ணே தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி 1921இல் மறைந்தார். அவர்தம் வளமனை பெரம்பூர் வேளாளர் தெருவில் பயன்மரம் செறிந்த சோலையின் முகப்பில் அன்றிருந்தபடியே மாற்றமேதுமில்லாமல் இன்றும் இருக்கின்றது. அவர் திருவள்ளுவர், கண்ணகி சரித்திரம், கம்பர், தமிழ் வியாசங்கள், தமிழ் வியாசமஞ்சரி, பஞ்சலட்சணம், ஆசாரக்கோவை உரை, முதுமொழிக்காஞ்சி உரை, அறநெறிச்சாரம் உரை, பழமொழி நானூறு உரை, மகாதேவ கோவிந்தரானடே முதலிய நூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளனர்.

கழகந் தொடங்கிய 1920 செப்டம்பர் முதல் மூன்றாண்டுகள் வரை யானே மிதிவண்டியில் சென்னையில் விற்பனைக்குக் கிடைக்கப் பெறும் நூல்களை ஆங்காங்கே சென்று வாங்கி வந்து விற்று வருவதுபோல் பெரம்பூருக்குச் சென்று பேராசிரியர் செல்வக்கேசவராய முதலியார் எழுதிய நூல்களையும் வாங்கி வருவதுண்டு.

பேராசிரியர் எழுதிப் பதித்த நூல்களை வாங்கி விற்பதற்கும், அவர் தமது ஆராய்ச்சிக்குப் பயன் படுத்திய நூல்களை மறைமலையடிகள் நூல் நிலையத்துக்குப் பெறவும் பத்தாண்டுகட்குமுன் ஒருமுறை சென்று அவர்தம் பேரர் திரு நம்பிராசன் அவர்களிடம் கேட்டபோது 'பொறுத்திருங்கள், பார்க்கலாம்'

என்று சொல்லிவிட்டார்கள். ஒரு திங்கட்குமுன் திரும்பவும் அவரிடஞ் சென்று விற்பனைக்குரிய நூல்களை விற்றுத்தரக் கொடுக்குமாறும், தாத்தா ஆராய்ச்சிக்குத் தொகுத்து வைத்திருக்கும் நூல்களையும் அவர்க்குப் புலவர் பலர் எழுதியுள்ள கடிதங்களையும் மறைமலையடிகள் நூல்நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்குமாறும் வேண்டினேன். பெரிய மரப் பேழைகள் இரண்டில் விற்பனைக்குரிய நூல்களும் சிறிய மரப் பேழைகள் இரண்டில் ஆராய்ந்த பழைய நூல்களும் இருந்தன. விற்பனைக் குரிய நூல்களைமட்டுங் காட்டி முழுவதையும் பணங் கொடுத்து வாங்கிக் கொள்வதாயின், சிறிய பேழைகளில் தம் தாத்தா ஆராய்ந்த நூல்களை மறைமலையடிகள் நூல்நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்குவதாகச் சொன்னார்கள். ஆனால், பேழைகள் நான்கிற்கும் தாம் திட்டப்படுத்தும் தொகையினைக் கொடுத்துவிட வேண்டுமென்றுஞ் சொன்னார்கள். சிறிய பேழைகளிலுள்ள நூல்கள் முழுமையும் காட்டவிரும்பாமல் ஒரு சிலவற்றையே எடுத்துக் காட்டினார்கள். அவை பழைய பதிப்புக்களாகக் காணப்பட்டமையால் மீதி நூல்களும் பயனுடைய பழைய பதிப்பு நூல்களாகவே இருத்தல் வேண்டுமென்று கருதி விற்பனைக்குரிய நூல்கட்கு விலை திட்டப் படுத்தி அத் தொகையுடன் பேழைகள் நான்கிற்குமுரிய விலையினையும் கொடுப்பதற்கு இசைந்தேன்.

பேசியபடி தொகையினைக் கொடுத்து, விற்பனைக்குரிய நூல்களையும் அவை வைக்கப் பெற்றிருந்த பெரிய மரப் பேழைகள் இரண்டையும் முதற்கண் எடுத்துவரச் செய்தேன். அடுத்துச் சிறிய பேழைகளிலுள்ள நூல்களையும் பேழைகளையும் மறைமலையடிகள் நூல் நிலையத்துக்கு எடுத்து வந்து சரிபார்த்த போது அவற்றில் தமிழ்ப் பேரறிஞரான ஆங்கிலப் பெருமகனார் டாக்டர் ஜி. யு. போப் ஆராய்ந்து குறிப்புக்கள் எழுதிய புறநானூறும் (டாக்டர் சாமிநாதையர் 1894 இல் முதன் முதல் பதித்தது.), பழமொழி நானூறு சொற்றொகுதி அடங்கிய மூன்று ஏடுகளும் (Note Books), 201 முதல் 400 முடியவுள்ள பழமொழி நானூறு கையெழுத்துப்படியும் காணப்பெற்றன. அதனால் பேராசிரியர்க்கும் டாக்டர் போப்பையரவர்கட்கும் தொடர்பு இருந்திருக்கிறது என்பது புலனாயிற்று. போப்பையரவர்கள் ஆராய்ந்த நூல்களெல்லாவற்றையும் நெல்லைமாவட்டத்தில் தாம் தொடங்கிய சாயர்புரம் கல்லூரிக்கு அனுப்பி வைத்திருக்கவும் புறநானூறு, பழமொழி நானூறு ஆகிய இரண்டை மட்டும் பேராசிரியர்க்கு அனுப்பியதன் காரணம் யாதாயிருக்குமென ஆராயலானேன்.

என் பவள விழாவிலே வெளியிடப் பெற்ற 'Tamil Heroic Poems' என்ற ஆங்கில நூலில் புறப்பொருள் வெண்பாமாலை ஆங்கில மொழிபெயர்ப்பும், புறநானூற்றில் 71 பாட்டுகளுக்கு மட்டுமுள்ள ஆங்கில மொழி பெயர்ப்பும் அடங்கியுள்ளன.

பழமொழி நானூற்றில் போப்பையர் அவர்கள் மொழி பெயர்த்த பாட்டுக்களில் ஒன்றுகூட எதிலும் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் வரலாற்றில் பழமொழி நானூற்றை மொழிபெயர்க்க விரும்பிச் சொற்றொகுதி எழுதியிருப்பதாகவும் ஒரு சில பாட்டுக்களை மொழிபெயர்த்துள்ளதாகவுங் குறிக்கப் பெற்றுள்ளன.

பழமொழி நானூற்றில் 201 முதல் 400 வரையுள்ள பாடல்களடங்கிய கையெழுத்துப்படி இருக்கிறபோது 1 முதல் 200 முடியவுள்ள கையெழுத்துப்படி இருத்தல் வேண்டுமே என்று பேராசிரியரின் பேரன் திரு நம்பிராசனிடங் கேட்டேன். சிதைந்துபோன சில நூல்களையும், ஏட்டுச்சுவடிகளையும், கடிதங்கள் முதலியவற்றையும் எரித்துவிட்டதாகச் சொன்னார்கள். அப்படி எரிக்கப்பட்டவற்றில் பழமொழி நானூறு முதற் பகுதி ஒன்றாக இருத்தல் வேண்டுமென்றார்கள். இரண்டாவது கையேட்டிலுள்ள 400 பாடல்களில் 67 பாடல்களுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பு உள்ளது. அதேபோல் முதல் 200 பாடல்களிலும் சிலவற்றை மொழிபெயர்த்திருப்பார்கள் என்று திட்டமாகக் கருத வேண்டியதாகிறது.

அகவை முதிர்ந்த நிலையில் தம்மால் பழமொழி நானூறு, புறநானூறு ஆகிய இரண்டையும் மொழிபெயர்த்து முடிக்க முடியாதென்று கருதியே தாம் ஆராய்ந்து அரைகுறையாக மொழிபெயர்த்து வைத்துள்ள புறநானூற்றையும் பழமொழி நானூற்றையும் பேராசிரியர் செல்வக்கேசவராய முதலியார் அவர்கட்கு அனுப்பி வைத்திருக்க வேண்டுமென்று ஊகிக்க வேண்டி யிருக்கிறது. கடிதங்கள் கிடைத்திருப்பின் தெளிவு ஏற்பட்டிருக்கும். டாக்டர் போப் அவர்கள் 1908இல் மறைந்து 8 ஆண்டுகட்குப் பின்னரே அஃதாவது 1916 இல் பேராசிரியர் பழமொழி நானூற்றைப் பதவுரை, விளக்கவுரைகளோடும், நூல் முகப்பில் பழமொழிகளை மட்டும் ஆங்கில மொழிபெயர்ப்போடும் வெளியிட்டுள்ளார்கள். அதன் முகவுரையில் டாக்டர் போப் அவர்களைப் பற்றிய குறிப்பொன்றும் காணப்பெறவில்லை. அது வியப்புக்குரியது.

மறைமலையடிகள் நூல்நிலையத்தில் பேணிக்காத்து வைத்திருக்கும் திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய

மூன்றையும் டாக்டர் போப் அவர்கள் மொழிபெயர்ப்பதற்கு முன் எவ்வாறு சீர் பிரித்தும் குறிப்புக்கள் எழுதியுமுள்ளார்களோ அவ்வாறே புறநானூறு முழுமையும் ஆராய்ந்து குறிப்புக்கள் எழுதி வைத்திருப்பது எண்ணி எண்ணி இறும்பூதெய்துதற்குரியது.

திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய மூன்றும் டாக்டர் போப் அவர்கள் உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந்துள்ளது போல் புறநானூறும் பழமொழி நானூறும் கவர்ந்துள்ளன என்று கருதுவது மிகையாகாது.

கழகம் வெளியிட்ட 'Tamil Heroic Poems' என்ற நூலில் புறப்பொருள் வெண்பாமாலையோடு புறநானூற்றில் 71 பாடல்கட்கு மட்டுமே மொழிபெயர்ப்புள்ளது. இப்போது கிடைக்கப் பெற்ற புறநானூறு மூலப்படியில் 134, 167 ஆம் பாடல்கட்குரிய மொழிபெயர்ப்பு ஏதோ ஆங்கில இதழுக்கு எழுதியனுப்பியதினின்றும் வெட்டி எடுத்து ஒட்டி வைத்திருக்கின்றனர். அவற்றை அப்படியே அடியிற்கண்டு மகிழ்கவென வேண்டுகிறேன்.

புறநானூறு - 134 (Pure Virtue)

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆஅய் அலன் பிறருஞ்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கை வண்மையே.

திணை : பாடாண்டிணை; துறை : இயன்மொழி. ஆயைப் பாடியது.

பாடியவர் : உறையூர் ஏணிச் சேரி முடமோசியார்.

What is done in this world shall in other worlds
Avail, - men say who virtue make a thing of merchandise :—
Ay's generous soul follows the course marked out
By all the ancient great and good.

i. e. The mercinary spirit that expects just so much in Svarga as virtuous deeds have purchased, was not King Ay. His virtue was founded on time - sanctioned and precedents. In Kurral Chap. xiv this is Orukkan the 'merchandise' Compare Pope's Naladiyar, int. to xi p. 60.

புறநானூறு - 167 (Pleasant to ear and eye)

நீயே, அமர்காணின் அமர்கடந்தவர்
படைவிலக்கி யெதிர்நிற்றலின்

வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக் கினியை கட்கின் னாயே
அவரே, நிற்காணிற் புறங்கொடுத்தலின்
ஊறறியா மெய்யாக்கையொடு
கண்ணுக் கினியர் செவிக்கின் னாரே
அதனால், நீயுமொன் றினியை அவருமொன் றினியர்
ஒவ்வா யாவுள மற்றே வெல்போர்க்
கழல்புனை திருந்தடிக் கடுமான் கிள்ளி
நின்னை வியக்குமிவ் வுலகமஃது
என்னோ பெரும வுரைத்திசி னெமக்கே.

திணை: வாகை; துறை: அரசவாகை

ஏனாதி திருக்கிள்ளியைப் பாடியது.

கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியது.

The following is a song in honour of a commandar-in-chief. whose name was Tiru Killi. The poet was Madalan - Mathurai-Kumaranar of Erichil. The warrior, the bard and the town are alike unknown.

When war arose thou did'st overcome in fight
thy trembling foes, and drive them far,
So hath it come to pass thy form is seemed
with many a wound of sword and spear.
Thus to the ear thy name sounds pleasantly,
albeit the form not fair to see. Thy foe
when he saw thee straight turns his back and 'scaped,
unscathed by dart or blade. So he to sight
is passing fair; to ear hath scanty praise
Well! thou has't one, and he has one to boast.
Thus is it that the world would judge you both ,
Each man has here his compensating gain.
But say, how is it in the red world ?

This implication here is that the world judges merely by its senses, by ear and eye; and so gives partial and superficial judgment; but the time is coming when the scarred and maimed body of the hero shall beyond the world of sense, be exchanged for a garment of immortal praise.

மேலும் இறுதி வாழ்நாளில் புத்தாண்டு வாழ்த்துக்குப் புறநானூற்றுப் பாடல்களையே பயன்படுத்தியுள்ளனர் என்பது 'செந்தமிழ்ச் செல்வி' சிலம்பு 48, பக்கம் 194. காண்க.

3—1—1896இல் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கட்கு டாக்டர் போப் எழுதிய கடிதத்தில் "புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய இரண்டையும் ஒன்றாகவே வைத்து ஆராய்ந்து வருகின்றேன்" என்று எழுதி யிருப்பதனாலும் புறநானூற்றில் அவருக்கிருந்த ஈடுபாடு புலனாகின்றது.

டாக்டர் போப் அவர்கள் விரும்பியபடி பேராசிரியர் செல்வக் கேசவராய முதலியார் அவர்கள் புறநானூறு, பழமொழி நானூறு ஆகிய இரண்டையும் முழுதும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டிருப்பின் மறுமை யுலகில் வாழும் டாக்டர் போப் அவர்கள் எத்துணை இன்பம் அடைவார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ !

பழமொழி நானூறும் அவரை ஏன் பெரிதுங் கவர்ந்துள்ளது என்பது பற்றியும் அறிதற்பாலது.

திரு ஜே. எம். நல்லசாமி பிள்ளை நடத்திய சித்தாந்த தீபிகை என்னும் ஆங்கில இதழ் (1908) தொகுதி 3 பகுதி 11 இல்,

"Palamoli I have copies translated and finished lexicon; but I cannot get the old Commentary. My Tanjore Mss differs widely from Subbaroya Chetti's"

பேராசிரியர் சுப்பராய செட்டியார் பதித்த பழமொழி நானூறு பற்றிப் பேராசிரியர் செல்வக்கேசவராய முதலியார் தமது உரை நூலின் பதிப்புரையில் "பழைய நார்மல் காலேஜில் தமிழாசிரியராகவிருந்த திரு சோடசாவதானம் சுப்பராய செட்டியார் 1874 ஆம் ஆண்டு இந்நூலைப் பாலியல்களாக வகுத்து மூலபாடத்தை அச்சிட்டார். அதில் பப்பத்து வெண்பாக்கள் அடங்கிய முப்பத்தொன்பது அதிகாரங்கள் உண்டு. பத்து வெண்பாக்கள் விடுபட்டுப் போயின" என்று எழுதியுள்ளனர்.

பேராசிரியர் தமது ஆராய்ச்சிக்குத் தொகுத்து வைக்கப் பெற்ற நூல்களுள் அவர்தம் தவத்தந்தையார் கேசவ சுப்பராய முதலியார் தம் கைப்பட பழமொழி நானூறு முழுவதையும் தாளேட்டில் (Note Book) அழகாய் முத்துப்போல் எழுதிவைத்துள்ள நூலும் ஒன்றாகும். அதன்கண் 399 வெண்பாக்களே

காணப்பெறுகின்றன. அவை பாலியல்களாகப் பிரிக்கப் பெற வில்லை. ஆனால் அதன்கண் இறுதியில்,

பிண்டியி னீழற் பெருமா னடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறுங்—கொண்டினிதா
முன்றுறை மன்னவ னன்கடியுஞ் செய்தமைத்த
இன்னுறை;வெண்பா விவை.

என்ற வெண்பா காணப்பெறுகின்றது. வித்துவான் ம. சண் முகம் பிள்ளை எழுதிய பழமொழி நானூறு கையெழுத்துப்படியும் அந்நூற்றொகுப்பிலே கிடைத்தது.

டாக்டர் போப் அவர்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல் களுள் ஒன்றாகிய பழமொழி நானூறுமீது பற்றுக் கொள்வதற் குரிய காரணம் யாதாயிருத்தல் கூடும் என்பது ஆராய்தற் குரியது.

அக்காலத்து நூல்களிலும் இக்காலத்து நூல்களிலும் பழமொழிகள் ஒவ்வோரிடத்து வழங்கப் பெற்றுள்ளன. ஆயினும் பழமொழிகளின் சார்பை முற்றுங் கொண்டு பொரு ளுணர்த்திய வேறு நூல் எதுவும் இவ்வாசிரியர்க்கு முன் இருந்த தாகப் புலப்படவில்லை. இந்த முதன்மை இந்நூலுக்கே உரியது என்றும், திருக்குறள் நாலடியார் முதலியவற்றிலும் காணப்படாமல் ஆசிரியர் பட்டறிவினால் நுனித்தறிந்த பல அரிய கருத்துக்கள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன என்றும் பேராசிரியர் தமது பதிப்புரையில் தெரிவித்துள்ளார்.

ஒரு பழமொழியை விளக்குதற்கு ஒரு வெண்பா ஆக்கு முறையில் 400 பழமொழிகட்கு 400 வெண்பாக்களை ஆக்குவது அரிய செயலென டாக்டர் போப் அவர்கள் உணர்ந்தமை யினாலேயே அந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதற்கு விழைந்தனர்.

பேராசிரியர் நூல் தொகுப்பில் பழமொழி நானூறு உரை, கையெழுத்துப்படிகள் இரண்டுடன் தொல்காப்பியம் சொல்லதி காரம் கல்லாடனார் உரை, சொல்லதிகாரம் இளம்பூரணருரை, பன்னிருபாட்டியல் மூலம், இராமாயணக் கருப் பொருள், பேரா சிரியரின் தந்தையார் தம் கைப்பட எழுதிய இறையனாரகப் பொருள் உரை, குவலயானந்தம் மூலமும் உரையும், ஸ்ரீ வசன பூஷணம் ஆகியவற்றின் கையெழுத்துப்படிகளும் இருந்தன. அக்காலத்தில் நூல்கள் சில அச்சிடப் பெறுமையால் புலவர்கள் ஏடுகளினின்றும் படி எழுதிப் படித்து வந்திருக்கின்றனர். பேராசிரியரின் தந்தையார் எழுதிய இறையனாரகப் பொருளுரை

கையெழுத்துப் படியும், பழமொழி நானூறு கையெழுத்துப்படியும் நூற்காட்சியமைப்பிற்கு அழகூட்டும் பொற்கலங்களாகும் என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே, பேராசிரியரின் தந்தையார் கேசவ சுப்பராய முதலியாரவர்கள் உருவப்படம் கிடைக்குமா வெனக் கேட்டேன். இல்லை என்ற விடை எனக்கு மிக்க வருத்தம் தந்தது.

இங்கே பேராசிரியர்க்குச் 'செல்வக் கேசவராய முதலியார்' என்னும் பெயர் அவர் தந்தையாரால் வைத்தமைக்குரிய காரணம் அடியில் வருமாறு :

குவலயானந்தம் உரை கையெழுத்துப்படி 113 ஆம் பக்கம் இறுதியில்,

> ''இராக்ஷச வருஷம் (1856); பங்குனி மீ உ௰௯ ௳ குருவாரதினம் 'குவலயானந்த மெனு மலங்கார லக்ஷண விருத்தி' வானவராய கோத்திரம் செல்லப்ப முதலியார் பௌத்திரனும், கேசவராய முதலியார் புத்திரனுமாகிய கேசவசுப்பராய உபாத்தியாயனால் எழுதி நிறைந்தது''

என எழுதப்பட்டுள்ளது. எனவே மேலே குறிப்பிட்ட மூன்று பெயர்களிலும் தடித்த எழுத்திலுள்ள சொற்களை எடுத்துத் தம் மகனார்க்குப் பெயர் அமைத்தனர் என்பது மகிழ்தற்குரியது.

ஆனால், பேராசிரியர் அவர்களோ தம் ஆண்மக்கள் மூவர்க்கும், 'நச்சினார்க்கினியன்' 'சேனாவரையன்' 'பரிமேலழகன்' என்னும் பழைய உரையாசிரியர் பெயர்களையே சூட்டி மகிழ்ந்தனர். உரையாசிரியர் பெயர்களைத் தாங்கிய அம் மூவரும் தம் மக்களுக்குக் குறிக்கோளில்லாமல் வெவ்வேறு பெயர்களை வைத்துள்ளனர்.

தமிழ் மக்கள் பெயர்களெல்லாம் தூய தமிழ்ப் பெயர்களாக வழங்குதல் வேண்டுமென்னும் உணர்வு தம் மக்களிடையே பெருகுதல் வேண்டும்.

பேராசிரியர் தம் ஆராய்ச்சிக் கென்றே தொகுத்து வைத்திருந்த அரிய நூல்களை அவர் தம் குடும்பத்தார் மறைமலையடிகள் நூல்நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்கியமைக்குக் கழகச் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்

—வ சுப்பையா

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

புல்[3] — திரட்டற் கருத்து வேர்ச்சொல் பருத்தற் கருத்தினின்று திரட்டற் கருத்துப் பிறக்கும்.

பொழித்தல் = திரட்டுதல். பொழிப்பு = திரட்டு, பிண்டம். பொளி = திரண்ட வரப்பு. "பொளியை வெட்டி இரண்டு தலையும் ஒன்றாக்கினான்." (W.).

வரம்பு கட்டுதல், வரம்பு திரட்டுதல் என்னும் வழக்குகளை நோக்குக.

பொளி—பொழி = 1. கணு. "பொற்குடம் பொருந்திய பொழியமை மணித்தூண்" (பெருங். உஞ்சைக். 48 : 87). 2. வயல்வரம்பு, வரப்பு.

புல்—புள்—பிள்—பிழம்பு = 1. திரட்சி. "கடுந்தழற் பிழம் பன்ன" (திருவாச. 29 : 7). 2. வடிவு. "உண்மை யுணர்த்திப் பிழம்புணர்த்தப் படாதன" (இறை. பக். 15). 3. உடல். "பிழம்புநனி யுலர்த்தல்" (தொல். புறத். 20, உரை).

பிள்—பிண்டு = 1. திரட்சி. 2. உடம்பு. "பிண்டாலம் வித்தின்" (திருமந். 3025).

ஒ. நோ : கள்—கண்டு, நள்—நண்டு, சுள்—சுண்டு, வள்—வண்டு.

பிண்டு—பிண்டம் = 1. திரளை. 2. சோற்றுத் திரளை. "பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்" (தொல். புறத். 8). 3. உண்டை. (பிங்.) 4. தென்புலத்தார்க்குப் படைக்கும் சோற்றுண்டை. 5. சதைத்திரள். "உறுப்பில் பிண்டமும்" (புறம். 28). 6. உடம்பு. "உண்டி முதற்றே உணவின் பிண்டம்" (புறம். 18). 7. தொகுதி. "பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்" (புறம். 184). 8. நூற்பிரிவுப் பொருளைப் பொதுப்படத் தொகுத்துக் கூறும் நூற்பா. "பிண்டந் தொகை வகை குறியே செய்கை" (நன். 20). 9. மூவுறுப்படங்கிய நூல். "மூன்றுறுப் படக்கிய பிண்டத்தானும்" (தொல். செய். 170).

ஒ. நோ : கண்டு—கண்டம், துண்டு—துண்டம்.

தெ பிண்டலி, வ. பிண்ட, க. பெண்ட்டெ, ஹெண்ட்டெ, ஹெண்டெ.

பிண்டக்கரு = உறுப்பற்ற சதைத்திரளான கரு. (Embryo, foetus).

பிண்டக் காப்பு = சோறு. பிண்டக் காப்புக்குத் தாளம் போடுகிறான். (உ. வ.).

பிண்டக் கருமம் = தென்புலத்தார்க்குப் பிண்டம் படைக்கும் சடங்கு.

பிண்டகன் = பிண்டம் படைப்போன்.

பிண்ட நூற்பா = அதிகாரப் பொருளை அல்லது நூற்பிரிவுப் பொருளைத் தொகுத்துக் கூறும் நூற்பா.

பிண்டதானம் = பிண்டம் படைப்பு.

பிண்டப் பொருள் = கருத்து. (W.).

பிண்டப் பொழிப்பு = பிண்டவுரை. (சி. போ. பா. 1, பக். 26, சுவாமிநா.).

பிண்டபாகம் = ஐயம் (பிச்சை). (அக. நி.).

பிண்டம் பிடித்தல் = (செ. குன்று. வி.) 1. உண்டை திரட்டுதல். 2. உருச்சிதைத்து உருண்டை யாக்குதல். (செ. குன்றிய வி.) கரு உண்டாதல். (உ. வ.).

பிண்டம் விழுதல் = காய் விழுதல் (Abortion).

பிண்டவுரை = பொழிப்புரை. (W.).

கரு, கருமம், தானம், பாகம் என்பன வடமொழிக்கண் சென்று வழங்கும் தென்சொற்களே. என் *வடமொழி வரலாறு என்னும் நூலைப் பார்க்க.

பிண்டு - பிண்டி. ஒ. நோ: கண்டு — கண்டி, துண்டு — துண்டி.

பிண்டி = 1. வடிவம். (சிலப். 3 : 26, உரை). 2. கூட்டம். (W.). 3. ஏழாம்நாள் (புனர்பூசம்). (சூடா.). 4. இணையா வினைக்கை வகை. (சிலப். 3 : 18, உரை).

---

* Sanskrit Language viii Non-Aryan Influence in Sanskrit.

பிண்டித்தல் = (செ. குன்றா வி.) 1. திரளை யாக்குதல். "பிண்டித்து வைத்த வுண்டியை" (தொல். புறத். 8, உரை). 2. தொகுத்தல். (செ. குன்றிய வி.) திரளுதல். "பிண்டித்துப் பெருகிற் றென்பார்" (சீவக. 1276).

பிண்டி — பிடி. ஒ நோ : கண்டி கடி, தண்டி — தடி.

பிடித்தல் = 1. (செ. குன்றா வி.) கையால் இறுக்கித் திரட்டுதல் அல்லது திரளையாக்குதல். பொரிவிளங்காய் பிடிக்க வேண்டும். (உ. வ.). 2. கையால் இறுக்கித் திரட்டிப் படிமை யமைத்தல். "பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது." (பழ.). 3. கையால் இறுக்கித் திரட்டுதல் போல் ஒன்றை இறுகப் பற்றுதல். குடை பிடித்தான். (உ. வ.). 4. ஒன்று இன்னொன்றைப் பற்றுதல். பூனை எலியைப் பிடிக்கும்., இன்றைக்குக் குளத்தில் மீன் பிடிக்கிறார்கள். ஓடுகிற மாட்டைப் பிடித்துக் கொண்டு வந்தான். ஊர்காவலர் குற்றவாளியைப் பிடித்துக் கொண்டார்கள். இந்தப் பிள்ளையைக் கொஞ்சநேரம் பிடி. (உ. வ.). 5. கோணியைப் பிடித்து வாங்குதல். திருநெல்வேலிக்கு அரிசி பிடிக்கப் போயிருக்கிறார்கள். (உ. வ.). 6. கயிற்றைப் பிடித்து வாங்குதல் காங்கேயத்திலிருந்து ஒரு சோடி மாடு பிடித்து வந்திருக்கிறான். (உ. வ.). 7. கலத்தில் நீர் கொள்ளுதல். குழாயில் நீர் பிடித்துவா. (உ. வ.). 8. கழங்கு விளையாடுதல். தட்டாங்கல் பிடித்து விளையாடு கிறார்கள். ஒற்றையா இரட்டையா பிடிக்கலாமா ? (உ. வ.). 9 பொருத்துதல் நாற்காலிக் காலுக்கு வாங்கு பிடிக்க வேண்டும். (உ. வ.). 10 அழுத்தித் தடவுதல். உடம்பு பிடிக்கிறவன் இங்கே இருக்கிறானா ? 11. சுளுக்குதல். காலில் நரம்பு பிடித்துக் கொண்டிருக்கிறது. உ. வ.). 12. இறுக்க மாயிருத்தல் சட்டை முதுகிற் பிடிக்கிறது (உ. வ.). 13. உள்ளடக்குதல். அந்தப் பெட்டி எல்லார் உடுப்பையும் பிடிக்கும். (உ. வ.). 14. ஒட்டிக் கொள்ளுதல். பேன் பிடித்த தலை. (உ. வ). 15. தாங்குதல். முட்டுக் கட்டை சுவரைப் பிடித்துக் கொண்டிருக்கிறது (உ வ). 16. ஒளிபாடம் எடுத்தல் படம் பிடிக்கும் இடம் (உ. வ.). 17. பற்றிக் கொள்ளுதல். யார் சேலையிலிருந்தோ சாயம் பிடித்து விட்டது. (உ. வ.). 18. பற்றியெரிதல். குடிசையில் தீப்பிடித்து விட்டது. 19. அடித்தல். விதை பிடித்த காளை. 20. குறைத்தல். சம்பளத்திற் பத்து ரூபா பிடித்துக் கொண்டார்கள். (உ. வ.) 21. நிறுத்தி யடக்குதல். சல்லிக்கட்டில் மாடு பிடிப்பார்கள். (உ. வ.). 22. அடைதல். "பெருகிய செல்வநீ பிடி". (கம்பரா. கிளைகாண். 2?). 23. அடைத்தேறுதல். மதுரை

போய் வண்டியைப் பிடித்தான். 24. சொல்லைப் பயன் படுத்தல். அவன் சொன்ன சொல்லைப் பிடித்துக் கொண்டான். 25. அகப்படுத்துதல். அவன் பிடிகொடுக்க மாட்டான். (உ. வ.) 26. வசப்படுத்துதல். அவனைப் பிடித்தால் இது எளிதாய் முடியும். (உ. வ.). 27. பற்றுக் கோடாகக் கொள்ளுதல். "அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை" (திருவாச. 5 : 27). 28. புகலடைதல். "உன்னை நான் பிடித்தேன் கொள்" (திவ். திருவாய். 2 : 6 : 1). 29. மேற்கொள்ளுதல். "விசுவ ரூபம் பிடித்தானே" (இராமநா. சுந்தர. 19). 30. உணர்ந்து கொள்ளுதல். ஆசிரியன் கற்பித்ததை மாணவர் பிடித்துக்கொள்ள வேண்டும் (உ. வ). 31. குறிக்கொள்ளுதல். "பிடித்தது முடிக்கவல்ல விச்சையர்" (பிரபோத. 24 : 52) 32. கடைப்பிடித்தல். "பெருமானுரை பிடித்தேம்" (கம்பரா. நிகும். 143). 33. ஒட்டாரம் பண்ணுதல். ஒரே பிடியாய்ப் பிடிக்கிறான். (உ. வ.). (செ. குன்றிய வி.)

1. ஒட்டிக்கொள்ளுதல். அழுக்குப் பிடித்த துண்டு. 2. தோன்றுதல். மழையிற் பாசம் பிடிக்கும். (உ. வ) 3. விருப்பமாதல். எனக்கும் அவனுக்கும் பிடிக்காது. (உ. வ.) 4. ஏற்றதாதல். அந்தவூர்த் தண்ணீர் எனக்குப் பிடிக்கவில்லை. (உ. வ.). 5. செலவாதல். திருமணத்திற்கு ஆயிரம் உருபா பிடிக்கும். (உ. வ.) 6. நிகழ்தல். மலைநகரில் மாலைதொறும் மழை பிடிக்கும். (உ. வ.).

ம., க. பிடி.

பிடித்தம்=1. குறைப்பு. சம்பளப் பிடித்தம். 2. சிக்கனம். பிடித்தமாய்ச் செலவு செய்ய வேண்டும். 3. மனப்பொருத்தம். தகப்பனுக்கும் மகனுக்கும் பிடித்தமில்லை. 4. விருப்பம். மேனாட்டுப் பொருள்களில் எனக்குப் பிடித்தம் அதிகம். க. ஹிடித்த.

பிடித்து=பெ. ஒரு கைப் பிடிப்பொருள். "பிடித்தெருவும் வேண்டாது சாலப்படும்" (குறள். 1037). இ. தொடங்கி. "என் பிறப்பே பிடித்து" (ஈடு, 2 : 1 : 1).

பிடிப்பு=1. பற்றுகை. 2. ஒட்டுகை. 3. ஊதைப்பற்று. (Rheumatism). 4. பிடித்தம். 5. கருத்து. "பிறர் செல்வமும் நம்பேறெனப் பிடிப்புள்ள வெம்மிடத்து" (பிரபோத. 27 : 62). 6. உறுதி. 7. கட்டு. 8. கைப்பிடி. 9. சார்பு, தோது. "ஒருவனுக்குப் பிடிப்பாய்ப் பேச" (W.). 10. நிலைக்களம்.

ம, க. பிடிப்பு.

பிடிமானம்=1. பிடித்தம். 2. பிடிப்பு. 3 கைப்பிடி. 4. உறுதி.

பிடி=1. பற்றுகை. 2. கைமுட்டி. 3. மறுபிடி. 4. படைக்கலப்பிடி. "தோல் கழியொடு பிடி செறிப்பவும்" (புறம். 98). 5. உள்ளங்கைப் பிடியளவு "தன் கேளைப் பிடிகடொறும் வேருஞ் சுவைபெற வூட்டி" (வெங்கைக்கோ. 377). 6. நால் விரல் கொண்ட அளவு. 7. பணியார வகை. "பிடிசுட்டுப் படைத்தல்" (W.). 8. பேய். "பெண்டிர் பிடிபோல" (திருவுந்தி. 35). 9. உறுதி. 10. உதவி. 11. குதிரையின் வாய்க் கருவியிற் கோக்குங் குசை "மாத்தாட் பிடியொடு" (நெடுநல். 178). 12. மனத்திற் பதிகை. 13. நம்பிக்கை. 14. மதக்கொள்கை. 15 நளிநயம் (அபிநயம்) முதலிய வற்றின் எடுப்பு.

ம, தெ., க. பிடி.

பிடிக்கொம்பன் (சிறு கொம்புள்ள விலங்கு), பிடிக்கொழுக கட்டை, பிடிகயிறு, பிடிகல், பிடிகாசு, பிடிகாரன், பிடிகிழங்கு, பிடித்தராவி, பிடித்த வேர்ப்பங்கு, பிடிததாட்டிக்கழி, பிடிச் சிற்றுளி, பிடிச்சீலை, பிடிசாம்பல் பிடிசுட்டுப் படைததல், பிடி சுவர், பிடிசுற்றுதல், பிடிசெம்பு பிடிசோறு, பிடிக்தபிடி, பிடித்தாடி (பலகறை), பிடிதண்டம், பிடிதம் ஐயம்), பிடிநாள் (நன்னாள்), பிடிநெல், பிடிப்பிட்டு, பிடிபாடு, பிடிமண், பிடி மீசை, பிடியரிசி, பிடியல் (சிறுதுகில்), பிடிபன் (குறித்த அளவு கொள்ளும் பானை), பிடியாள், பிடியெழுதாணி முதலிய சொற்கள் தொன்று தொட்டு வழங்கி வருவன

கை பிடித்தல் (கைக் கொள்ளுதல்). கைபிடி (கையிற் பெற்றுக்கொண்ட பொருள்), கைபிடிசுவர் முதலிய கூட்டுச் சொற்களும், அரிவாட்பிடி, அறுவாட்பிடி, உளிப்பிடி, கத்திப் பிடி, குடைப்பிடி, கொட்டுபபிடி முதலிய பிடிவகைப் பெயர் களும்; உடுபபுபபிடி, கடைப்பிடி, குரங்குப்பிடி குருட்டுப்பிடி, விடாப்பிடி முதலிய - பிடிப்புப் பெயர்களும் தொன்று தொட்டனவே

பிண்டம் என்னும தென்சொல். வடமொழி மரபுப்படி ஈறுகெட்டுப் 'பிண்ட' என இருக்கு வேதத்தில் நின்று, திரளை, உண்டை என்னும் பொருள்களைக் குறிக்கின்றது. அதனின்று, 'பிண்டத்வ' 'பிண்டக்' 'பிண்டன' முதலிய தனிச் சொற்

களையும்; பிண்டகந்த, பிண்டகரண, பிண்டதர்க்க முதலிய கூட்டுச் சொற்களையும்; ஏறத்தாழ எழுபது வரை திரித்துள்ளனர்.

அங்ஙனமே, பிண்டி என்னும் தென்சொல் வடிவினின்று, பிண்டித, பிண்டின், பிண்டீ முதலிய தனிச் சொற்களையும்; பிண்டிதமூல்ய, பிண்டிதார்த்த, பிண்டீகரண, ஸ பிண்டீகரண, பிண்டீபாவ (bh) முதலிய கூட்டுச் சொற்களையும்; ஏறத்தாழ முப்பது வரை திரித்துள்ளனர்.

ஆரியத்திற்குத் தமிழொடு அல்லது திரவிடத்தொடு தொடர்பில்லையென்றும், சமற்கிருதம் ஏறத்தாழ ஐந்நூறு சொற்களை மட்டும் திரவிடத்தினின்று கடன் கொண்டுள்ள தென்றும், கூறும் பரோ என்னும் சமற்கிருதப் பேராசிரியர் கூட, பிண்டம் என்னும் சொல் தென்சொல்லே யென்று தம் 'சமற்கிருத மொழி' (Sanskrit Language) என்னும் நூலிற் பின் வருமாறு குறித்திருத்தல் காண்க.

"*Pinda* 'lump, clod' *Ka*, *petta*, *pette*, *pente*, *hente*, *hende*, 'clod, lump of earth,' *Te*, *pedda*, *pella* 'id', *pindali* 'a lump or mass', *Ka*, *Te*, *pindu* 'to squeeze together."

ஒ. நோ: பிழி பிழிதல் = உள்ளிருக்கும் நீர்ப்பொருள் வடியுமாறு, ஒன்றை இறுக்கிப் பிடித்தல்.

பிண்டம் அல்லது பிண்டி என்பது வடசொல்லாயின், பிடி என்னும் வினைச்சொல்லும், அதன் நூற்றுக்கணக்கான திரி சொற்களும் கூட்டுச்சொற்களும் வடசொல்லாம். பிடி என்பது, குமரி நாட்டில் தோன்றிய அடிப்படைத் தமிழ்ச் சொற்களுள் ஒன்றுதலாலும், இருக்குவேதம் மிகப் பிற்காலத்ததாதலாலும், பிண்டம் அல்லது பிண்டி என்பது தென்சொல்லே யென்பது தெரிதரு தேற்றமாம்.

முந்திய கட்டுரையிலுள்ள இரு சொற்களைப் பற்றிய குறிப்புக்கள்

1. பர்யங்க்க

பல்லக்கைக் குறிக்கும் பர்யங்க்க என்னும் வடசொல், பல்யங்க்க என்னும் வடிவும் கொள்ளும். அது தென்சொல் வடிவிற்கு நெருக்கமான தென்பது தெளிவு.

பர்யங்க்க என்னும் வடசொற்கு மூல விளக்கம், மானியர் வில்லியம்சு சமற்கிருத ஆங்கில அகர முதலியிற் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது.

"*pary anc*... ....to turn about or round, revolve, R. V. X, 119,5.

• *Pary-anka*..........a bed, couch, sofa, litter, palanquin, Kaush Up........."

புரிதல்=வளைதல். எ - டு: வலம்புரி, இடம்புரி. புரி—பரி. பரிதி=வட்டமான கதிரவன். பரிசல்=வட்டமான நீர்க் கடத்துக் கூடை. பரிசை=வட்டமான கேடகம்.

அங்குதல்=வளைதல், சாய்தல், கோணுதல், வாட்டஞ் சாட்டமாதல்.

வணங்கு—வாங்கு—வங்கு—அங்கு. வங்கு—வங்கி= நெளிவளையல், வளைந்த கத்தி(பிச்சுவா) அங்கு - அங்கணம்= வாட்டஞ்சாட்டமான சாய்கடை

"*அங்கணத்து ளுக்க வமிழ்தற்றால்*" (குறள். 720).

"*ஊரங்கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்*" (நாலடி, 175).

பரி—வ. பரி, round, around, about, round about.

அங்கு—வ. அஞ்ச், to bend, curve, incline, curl.

ஒ. நோ: பொங்கு—பொஞ்சு.

பர்யங்க என்னும் வடசொற்குக் கூறப்படும் பொருட் காரணியம், ஒருமருங்கு தமிழுக்கும் பொருந்தும்.

பல்லங்கு—பல்லக்கு பல்லாக்கு.

பல்லங்கு=பலவளைவு. பல்லக்கின் மேல் மூங்கில் மூவளை வினதாயிருத்தல் காண்க.

"*வருந்தவளை வேய்அரசர் மாமுடியின் மேலாம்*" (நீதிவெண்பா. 7).

2. பெருகு (தயிர்).

புரை—பிரை—பெருகு=பிரை குத்தியதால் தயிரான பால், என்றுமாம்.

தெ. பெருகு, ம. பெருகு, பெருங்ஙு.

ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(முன் இதழ் ரு௯ ஆம் பக்கத் தொடர்ச்சி)

17. நன்னம்பிக்கை முனையில் பொன்னாட்கள்

இதோ எம். எஸ் பிள்ளை, வி. டி பிள்ளை, ஏராளமான தமிழர், குசராத்தியர், வெண்மையர், உண்மையர், திண்மையர், அந்தண்மையர் எல்லாரும் மாலையுடன் வரவேற்கின்றனர். "உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்" முழங்குகிறது. மாதர் சங்கம் முழுதும் அங்கே கூடியுள்ளது. நல்ல உந்திகள் எங்களை மகிழ்வுடன் ஏற்று அந்த மாபெரும் ஊரைச் சுற்றிக் காட்டி ஒண்ணழகில், இன்புறுத்தி 16, எர்னெஸ்டு ரோடு, ரைலாண்டஸ் ஈஸ்டு என்ற தெருவில் எம். எஸ் பிள்ளை வீட்டில் கொண்டு வந்து உய்த்தன.....பிள்ளைமார் என்றால் ஒரு தனிச் சிறப்பான பண்பாடு காண்கிறோம். நிறைகுடம் வைத்துச் சிவ முருகன் படம் வைத்துக் கற்பூரம் காட்டி மலர்தூவி அவர்கள் வரவேற்ற பண்பாட்டை நம்மவா கற்கவேண்டும். குடும்பத்தில் ஆண் பெண் அடங்கலும் படித்தவர்கள். எம். எஸ். பிள்ளை சிறந்த ஆங்கிலப் புலவர்; ஆப்பிரிகான்சும் பேசுவார். சைவ சமயத் திருத்தொண்டர், நெற்றியில் திருநீறில்லாமல் உண்ணார் ஐந்தெழுததை மறவார். "மற்றுப் பற்றெனக்கின்றி... சொல்லும் நா நமசசிவாயவே" என்ற தேவாரத்தைப் பாடி மந்திரமாவது நீறு சொல்லித் திருநீறு பூசி, அக்கமாலையை ஐந்து சுற்று உருட்டித் திருவாசகம் "நமச்சிவாய வாழ்க" முழுதும் பாடி முடித்தே அவர் நாட்கடனைத தொடங்குவது வழக்கம் அவர் குடும்பம் முழுதும் அவ்வாறே. அவர் மனைவியும் இரண்டு பெண்களும் நன்றாகப் படித்தவர்கள். பெண்கள் தக்க அலுவலில் மாதம் ஆயிரம் இரண்டாயிரம் ஈட்டுகின்றனர். உயர்ந்த ஆங்கில நூல்களும் விஞ்ஞான நூல்களும் பொழுது போக்காகப படித்துப் படிததுப் பேழையில் அடுக்கி வைககின்றனர். மாதர் சங்கம் தமிழ் வகுப்பும், தேவார வகுப்பும நடத்துகிறது.... வேறு பேச்சே கிடையாது. நான் உண்ணும்போதும் அவர்கள் தேவாரம் முழங்கும். அவர்கள் வீட்டுக் குழந்தைகள் காலை ஏழு மணிக்கு மலர் கனிகளுடன் "நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க" என்று வந்து வணங்கும்போது என் கண்களில இன்பக் கண்ணீர் பொங்கும். "ஐயா, எங்களைத் தமிழ் நாட்டிற்கு அழைத்துப் போறீங்களா சிதம்பரம் நடராசாவையும், மதுரை மீனாட்சியையும் காட்டுறீங்களா"

என்று அவர்கள் ஆர்வமாகக் கேட்கும் தமிழ்க் காதலை என்னென்பேன் !

திரு எம். எஸ். பிள்ளையும் அண்மையில் தமிழகம் வந்து என் விருந்தினராக இருந்து மகிழ்ந்தார். காலை ஏழு முதல் இரவு பத்துமணி வரையில் கூட்டமே; அறிஞரும் அன்பரும் வந்து, கலந்து, உரையாடி, மனமகிழ்ந்து சென்றனர். கல்லூரி வெண்புலவர் யோகக்கலை பற்றியே பெரும்பாலும் அளவளாவினர். எனது "Grand Epic of Saivism" சிலரிடம் இருந்தது...."With such wonderful saints why does your religion still lingers in a sleepy valley?" என்றொருவர், வெள்ளையர் வருந்தினர். "இவ்வளவு அற்புத முனிவரைக் கொண்ட உங்கள் சமயம் ஏன் இன்னும் தூங்குமூஞ்சியா யிருக்கிறது" என்ற அவர் கேள்விக்கு நான் பழனி, திருவண்ணாமலை, சாமிமலை, திருத்தணி, திருப்பதி மலைகளைக் காட்டி "Our religions shines on hill tops only we must open our eyes ahigh and all" "எங்கள் சமயம் இதோ மலை முடிகளில் விளங்குகிறது; நம் கண்களே திறந்து நிவந்து காணவேண்டும்" என்றேன்.

சைவசித்தாந்தம் பற்றிய என்னுடைய ஆங்கில வெளியீடுகள் நல்ல வேலை செய்துள்ளன. ஆனால் தனியாக என்னால் இயன்றதை என்றும் செய்து வருகிறேன். அரசும், திருமடங்களும் கைகொடுத்தால் உலகமுழுதும் உலாவித் தமிழர் அருட் கலையை ஆர்வமுடன் பரப்ப இதோ புறப்பட ஆயத்தமா யிருக்கிறேன். என் வயிற்றுக்குச் சோறோ என் பேனுவுக்கு மையோ கேட்கவில்லை, என்னுயிரான தமிழின் அருட் பண்பாட்டைப் பரப்ப வேண்டிய வசதி தரும்படி உங்கள் உள்ளத்தானையே வேண்டுகிறேன்.....வேலை பெரிது; நெடிது; காலம் கடிது, கொடிது, இருக்கும்போதே ஒவ்வொரு மூச்சையும் செவ்விய பணியில் ஊக்க வேண்டுகிறேன். இறைவன் செயல் நடக்கட்டும்.

யோகப் பயிற்சி

கேப்டவுன் நகரமாளிகையில் எனது யோகசாதனச் சொற்பொழிவு, பயிற்சி விளக்கத்துடன் நடந்து, அத்தனையும் படச் சுருளாக வெளிவந்தது. பல்லாண்டுகள் யோகப்பயிற்சியாலும், பல யோகிகள் உறவாலும், தனி ஆராய்ச்சியாலும் நான் எளிதான உயர்ந்த யோக முறைகளைக் கண்டு இயன்றதை நூலாக வெளியிட்டுள்ளேன்.

வாழ்வு முழுதுமே யோகமாக வேண்டும். உள்ளத்தான், உலகத்தான், வாழ்வின் அறவியல் அறிவியல், அன்பியல், நடையியல், பெண்ணியல், ஆணியல், இல்லறவியல், குடும்ப வியல், தொழிலியல், அரசியல், அருளியல், ஒற்றுமையியல், யோகசகதியியல், யோகசத்தியியல் என்று வாழ்வை முறைப் படுத்தித் தமிழிலும் ஆங்கிலததிலும், இந்தியிலும்கூட நூல் வெளியிட்டுள்ளேன். என் கடன் பணிசெய்தல், உங்கள் கடன் அறிவுக்கு அணிசெய்தல். வெறும் இருக்கைகளோ உடலை வளர்த்தலோ அன்று; மனதை மாசறச் செய்தலே யோகம். மனத்துக்கண் மாசிலனுதலே அறம்....அறம் என்பதே தீயதை அறுத்து நல்லதைப் பொருத்தித் தூயவாழ்வு வாழ்வதாகும். அதுதான் யோகம். யோகத்திற்கு உடல், உயிர், மனம், விஞ்ஞானம், ஆனந்தம் ஆகிய ஐந்து மண்டலங்கள் உண்டு.

I. (1) நல்ல உணவு நெறி (2) உயிர்ப்பு நெறி (உள் பிராணயாமம்) (3) உள் தூய்மை (4) பிராண முத்திரை, பிராண தாரணை, டங்காரம், நாவம், ஜோலம், சர்வாங்கம், ஈரல் உறுதி, ஜயாசனம், மச்சாசனம், உளமூச்சு, அமைதி.... இவை நுட்பமான இருக்கைகள். இவை பத்து மணித்துளிகளில் செய்து முடியும்.

II. பிறகு மூச்சொழுங்குப் பயிற்சிகள் ஐந்து உள்ளு யிர்ப்பு, நாதசாதனம்—இவை பத்து மணிததுளிகளில் முடியும்.

III. பிறகு குளித்து வந்து விளக்கேற்றி அல்லது கதிரவனை நோககியமர்ந்து, மந்திரஜபம் ஆன பிறகு தியானித் தல்—பதினைந்து மணித்துளிகள்.

IV. அரைமணி நேரம் நன்னூல் ஓதுதல்.

V. வாரம் ஒருமுறை கதிர்முழுக்கு. அரைமணி நேரம் துண்டு மட்டும் கட்டித் தனியிடத்தில் காற்றாட (ஓம் ஓம் ஓம் என்று மூச்சு இழுத்து விட்டுக் கொண்டே) நடைப்பயிற்சி செய்தல். இரவில் மணலைப் பரப்பி அதன்மேல் விரிப்பு விரித்து அமைதியாக உறங்கல், பசியளவு தூய சத்துணவு கொள்ளு தல் ஆகிய யோக வாழ்வை நன்ருக விளக்கினேன்.

கேள்விகள் பறந்தன.

எல்லோருக்கும் யோகம் வருமா?

யோகம் எல்லாருக்கும் பொதுவானது. அதிலும் எதிலும் சாதி மத வேறுபாடில்லை. ஏற்கும அளவுக்கு ஈவோம்.

யோகம் என்றால் ஆசனமா?

இல்லை; வையத்தில் வாழ்வாங்கு வாழலே யோகம்.

அரசியலில் யோகம் புகுமா?

அரசியல் ஒழுங்கிற்கு இராஜயோகம் அரண்செய்யும். அந்தக்கால அரசர் இயம, நியம, ஆசன, பிராணாயாம, பிரத்யாகார, தாரணை, தியான சமாதிகளால் மனதை வென்று புரந்தனர். அத்தகைய அரசியல் அருளியலாகி எல்லாருக்கும் நல்லதே செய்தது.

தியானம் எப்படி வரும்?

அது வருவதில்லை; நீர் அதைப் பெறுவதே தகவு.

எப்படிப் பெறுவது?

மனம் புறஞ் சென்றால் போகம்; உள்ளடங்கினால் யோகம். புறஞ்செல்லும் மனதை உள்ளே இழுத்தடக்கி அமைதி யான நிலையில் தியானம் பெறலாம்.

நாங்கள் காதலர். இருவரும் உயிர்போல ஒன்றுபட்டோம். எங்கள் காதலையே யோகமாக்கலாமா?

காதலைக் காமக் கனலாக்கி விந்தை இழந்தால் சோகமே கதி. காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி நாதன் நாமம் சொல்லிச் சிவசக்தி தாந்திர சாதனம் செய்தால் யோகமே யாகும்.

இதற்கு வழிகாட்டும் நூல்?

திருமந்திரம் ஒன்றே சரியான நூல் — சாத்திரத்திற்குத் திருமந்திரம்—தோத்திரத்திற்குத் திருவாசகம்.

இரண்டும் தமிழில் அல்லவா உள்ளன? எங்களுக்கு ஆங்கிலமே விளங்கும்.

திருமந்திரத்தை Maxims of Mulayogin என்ற ஆங்கில நூலாக யாத்துள்ளேன்; வெளியிடுகிறீரா?

நீர் வெளியிட்டால் எனக்கும் அனுப்புமே— ஏ!

பணம் வந்தபோது வெளியிடுகிறேன் — அனுப்புகிறேன். தேவாரத் திருமுறைகள் ஆயிரம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளேன்—வெளியிடுகிறீரா?

வெளியிடுமே — எனக்கும் அனுப்புமே.

இதுதான் நமது நிலைமை—சிவா சிவா, வாசி, வாசி.

"சங்க இலக்கியத்தில் இரம் என்ற மரம்"

[பி. எல். சாமி, பி.எஸ்ஸி.,]

இரம் : இரமென்ற ஒரு மரம் சங்க நூல்களில் இரண்டு பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
இரங்கா முன்ன திரங்குகண் வறுமுலைச்" —புறம் 276

"இரங்கா முன்ன வரும்புமுதி ரீங்கை" —அகம் 125.

"இரவு மிண்டுங் குரவுங் கோங்கும்"
—பெருங்கதை 1 : 52 : 40.

'இரம் என்றொரு மரமுண்டு, அது இரா, இரவு, இரவமென நூல்களில்வழங்கும்' என்று டாக்டர் உ. வே. சா. கூறியுள்ளார். புறநானூறும் அகநானூறும் 'இரங்காழ்' என்று இதன் விதையைக குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். இரங்காழ்போல ஈங்கையின் அரும்பு முதிர்வதாகச் சொல்லப்படுவதிலிருந்து இரமரத்தின் காழ் எப்படியிருக்கும் என்று தெரிந்து கொள்ள லாம். ஈங்கை என்பது இப்போது சீங்கை என்று அழைக்கப் படும் ஒரு முள் நிறைந்த கொடியாகும். புதராக வளரும் இந்த ஈங்கையின் காய் சீயக்காய் போல இருக்கும். அதுபோன்றே இரமரத்தின் காயும் இருக்குமென்று சொல்லப்பட்டுள்ளது. இரமரத்தின் காழ் கிழவியின் திரங்கிப்போன வற்றிய முலைபோல இருக்கும் என்று புறநானூறு கூறியுள்ளது. இரங்காழ் என்பது அதன் காயையே குறித்ததென்று கொள்ளலாம். இரம் என்பது பெருங்கதையில் இரவு என்று அழைக்கப்பட்டுள்ளது. இருள் என்று ஒரு மரத்தை இன்றும் பேச்சுவழக்கில் அழைக்கின்றனர். ஒருவகைக் காட்டுமரத்தையே இருள்மரம் என்றழைப்பர். மலையாளத்திலும் இருள் என்றும் இருள்முள்ளு என்றும் இந்த மரம் அழைக்கப்படுகின்றது. இந்த மரத்தின் காய் காய்ந்த சீயக்காய் போல உருவில் இருக்கும். கிழவியின் வற்றிய தொங்கிய முலைபோல இருப்பதாகக் கூறியது பொருத்தமான உவமையே. இரவு, இரா என்ற பழைய பெயர்களே இருள் என்று தற்காலத்தில் வழங்குவதாகக் கருதலாம். இந்த மரத்தின் அடிமரம் உள்ளே கரியதாக, உறுதியாக இருந்ததால் (Dark Heartwood) கரியமரத்தைக் குறிக்கும் பெயராக இரா, இரவு, இருள் என்ற பெயர்கள் தோன்றின என்று

கொள்ளலாம். இரவு, இரா என்ற சொற்கள் இருளைக் குறிக்கும். புறநானூற்றில் இரவம் என்றொரு மரம் கூறப்பட்டுள்ளது.

> *"தீங்கனி யிரவமொடு வேம்பு மனைச் செரீஇ"* —புறம் 281.

இந்த இரவமும் இரம் என்று சொல்லப்படும் மரம் என்று கொண்டனர். அது தவறென்று கருதவேண்டும். இரங்காழ் என்று புறநானூறும் அகநானூறும் அதன் காயைப்பற்றிக் கூறியுள்ளபோது இந்தப் புறப்பாட்டில் 'தீங்கனி' இரவமரத்திற்குஇருப்பதாகக்கூறியிருப்பதைக் காணலாம். தீங்கனியுடைய இந்தமரம் இரமரத்தின் வேருனதாக இருக்கும். இரத்தி என்ற பெயர் சங்கநூல்களில் இலந்தை மரத்தைக் குறித்து வழங்குகின்றது. இலந்தை மரத்தில் ஒருவகைக் கொட்டை இலந்தை என்றழைக்கப்படும். இவற்றுக்குத் 'தீங்கனி' உண்டு. அவற்றை மக்களும் உண்பர். தீங்கனியிருப்பதாகப் புறநானூறு கூறிய 'இரவம்' இலந்தையில் ஒருவகையாக இருக்கலாம். இலந்தையாகவும் இருக்கலாம். இரமரத்தைச் செடிநூலார் (xylia xylocarpa) என்று அழைப்பர். டாக்டர் பர்ரோ எழுதிய திராவிட ஒப்பியல் அகராதியில் ஈட்டி மரத்தையே 'இரவு' என்று கூறியுள்ளார். ஆனல், தமிழில் 'இருள்' என்று இன்றும் வழங்கும் மரமே 'இரவு' மரம் என்று கொள்ள வேண்டும். இலந்தை மரத்தின் இலையும் வேம்பு மரத்தின் இலையும் பழங்குடி மக்கள் தங்களுடைய மதச் சடங்குகளில் பயன்படுத்துகின்றனர். இந்த இரு மரங்களின் இலைகளை மனையில் செறுகினல் பேய், பூதம் வராது என்ற நம்பிக்கை உண்டு. புறநானூற்றுப் பாடலிலிருந்து சங்ககாலத்திலும் இந்த நம்பிக்கை இருந்ததை அறிகிறோம்.

(5) **தெறுழ்:** தெறுழ் என்றொரு செடிபற்றிச் சங்க நூல்களில் இரண்டே பாடல்கள் கூறுகின்றன.

> *"கார்ப்பெய றலைஇய காண்பின் காலைக்*
> *களிற்றுமுக வரியிற் றெறுழ்வீ பூப்பச்"* —புறம் 119.

> *"வருமழைக் கெதிரிய மணிநிற விரும்புதல்*
> *நரைநிறம் படுத்த நல்லிணர்த் தெறுழ்வீ*
> *தாஅந் தேரலர் கொல்லோ சேய்நாட்டுக்"* —நற்றிணை 302.

> *"............................அரும்பவிழ்ந்*
> *தீர்ந்தண் புறவில் எறுழ்வீ மலர்ந்தன"*
>
> —கார்நாற்பது 25.

தெறுழென்றது, காட்டகத்தொரு கொடி, புளிமாவென்றுரைப் பாரும் உளர் என்று புறநானூற்று உரையில் கூறப்பட்டுள்ளது. தெறுழ் கார்மழை பெய்தபின யானையின் முகத்தில் காணப்படும் சிவந்த புள்ளிகள்போலப் பூத்ததாகப் புறநானூறு கூறியுள்ளது. தெறுழ் என்பதே தெருளன் கொடி என்று அழைக்கப்படு கின்றது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். தெறுழ் என்ற சங்க காலப்பெயரின் மரூஉப் பெயரே தெருளன் என்ப தாகும். இது பெரிய கொடியாகும். யாவர்க்கும் தெரியும் வண்ணம் எளிதாகக் காடடில் காணப்படும் கொடியாகும். இந்தக் கொடி மழைக் காலத்தில் கொத்துக் கொத்தாகப் பூக்கும். செங்கல்நிறம் போன்று சிவப்பாகக் கொத்துக் கொத்தாக இக் கொடி பூப்பதைத் தொலைவில் இருந்துகூடக் கண்டு கொள்ள லாம். சங்க நூல்களில் கார் காலத்தில் பூப்பதையும் யானையின் நெற்றியில் காணப்படட தெருளங்கொடி என்று அழைக்கப் படும் கொடியே என்பது தெளிவாகின்றது. இந்தக் கொடியைச் செடிநூலார் (calycopteris floribunda) என்றழைப்பர். சங்க நூல்களில் ஒரு பாட்டில் தெற்றி என்ற செடி வீட்டில் வளரும் வயலைக்கொடியோடு கூறப்படுகின்றது. இந்தத் தெற்றி என்ற கொடி தெறுழின் வேருனது. வீட்டில் வளர்க்கப்பட்ட மரங்களில் தேற்ரு என்பது சஙக நூல்களில் இல்லம் என்றும் மனைமரம் என்றும் அழைக்கப்படுகின்றது. தெற்றி என்பது அதனினும் வேருனது என்று தெரிகின்றது. தெற்றி என்ப தற்குத் திண்ணை என்று ஒரு பொருள் உண்டு. திண்ணையில் வளர்க்கப்பட்ட கொடியாக இஃது இருக்கலாம். தெற்றி என்பதே 'தெற்றுக் கொடி' என்று அப்பர் தேவாரத்தில் வழங்கியுள்ளது. இந்தத் தெற்றுக் கொடி எதுவென்று தெரியப்போதிய செய்திகள் நூல்களில் இல்லை.

(6) **பெருவாய்:** சங்க நூல்களில் 'பெருவாய் என்ஞெரு செடிப் பெயர் பதிற்றுப்பத்தில் மட்டும் வருகின்றது.

"கொல்லிப், பெருவாய் மலரொடு பசும்பிடி மகிழ்ந்து"
—பதிற்றுப்பத்து 1 : 81 : 25

பெருவாய் மலர் என்பதற்கு இருவாட்சி என்று பொருள் கூறப் பட்டுள்ளது. இஃது ஒருவகை மல்லிகைப்பூ என்பதில் ஐயமில்லை. குறிஞ்சிப்பாட்டில் 'நள்ளிருள் நாறி' என்பதற்கு இருவாட்சிப்பூ என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இருள்வாசி என்பதே இருவாட்சி என்று வழங்குகின்றது என்றும் விளக்கத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆனல், இருவாய்ச்சி என்பதே இருவாட்சி என்று மாறியதாகக் கருதவேண்டும். பதிற்றுப்

பத்தில் பெரிய மல்லிகைப்பூவின் பெயராகப் பெருவாய் என்ற பெயர் வருவதால் அதே மரபில் இருவாய் என்ற பெயர் பெருமல்லிகையின் பெயராகத் தோன்றியிருக்க வேண்டும். இருவாய் என்பதே இருவாய்ச்சி, இருவாட்சி என மாறிப் பெரிய மல்லிகை மலரைக் குறித்து வழங்கிற்று. பெருவாய் என்பது சங்ககால வழக்கு. இருவாய், இருவாய்ச்சி (இருவாட்சி) என்ற பெயர்கள் அதே பொருளில் பின்னால் தோன்றியனவாகும். இரும்புலி, இருங்களிறு என்ற சங்ககால வழக்குகளில் 'இரு' என்ற சொல் பெரிய என்ற பொருளில வழங்கியதைக் காணலாம். தொல்காப்பியம் சேனாவரையருரையில் 'சிறு வெள்வாய்' என்ற பெயர்வழக்குக் காட்டப்பட்டுள்ளது. இது சிறிய மல்லிகை மலரைக் குறித்து வந்தது. பெருவாய் என்பதற்கு எதிராகச் சிறுவாய் என்ற பெயரும் வழங்கியது இதிலிருந்து தெளிவாகின்றது. பெருவாய், சிறுவாய் என்ற பெயர்கள் மல்லிகையின் வகைகளைக் குறித்து வழங்கின என்று தெரிகின்றது. மல்லிகை மலரே 'வெள்வீ' என்றும புறநானூற்றில் அழைககப் பட்டுள்ளது.

"வெள்வீ வேலிக் கோடைப் பொருந" —புறம் 205.

வெள்வீ என்பது கோடைக் கானல் மலையில் வேலியில் படர்ந்த காட்டு மல்லிகைப்பூவைக் குறித்துச் சொல்லியதாகத் தெரிகின்றது. 'சிறு வெள்வாய்' என்று சேனாவரையர் கூறிய வழக்குப் பெயரில் 'வெள்' என்ற அடை வந்திருப்பதைக் காணலாம். சங்க காலததிலேயே மல்லிகைச் செடியில் பலவகைகளைச் சங்கப் புலவர்கள் அறிந்திருந்தனர். முல்லை மௌவல், குளவி, பித்திகம், பெருவாய் என்ற பெயர்கள் சங்ககாலத்திலேயே மல்லிகைச் செடியின் சில வகைகளைக் குறித்து வழங்கியுள்ளதைக் கவனிக்க வேணடும். பிற்காலத்தில இருவாட்சி என்ற பெயரின் பொருளைப் புரியாது விசயநகர அரசாட்சி ஏற்பட்ட பின்னர் இருவாட்சி என்ற பெயரை விருபாட்சி என்று மாற்றி அந்தப் பெயரை இருவாட்சி மல்லிகையின் பெயராக அழைத்தனர். இருவாட்சி என்ற பெயர் விருபாட்சி என்று மாறியது பாமர மக்களின் வாயில் வழங்கியதன் காரணமாகும்

(7) ஏழில் :

"கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே
எம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி

அணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே"

—குறுந்தொகை 138.

வீட்டின் அயலதாகிய ஏழிற்குன்றத்தின் மேலுள்ள நொச்சியின் பூ விழும் ஓசையைத் தலைவியும் தோழியும் இரவில் கேட்டதாக இப் பாட்டில் சொல்லப்பட்டுள்ளது. நொச்சிமரம் வீட்டுக்கருகில் வளர்ந்ததாகவே பல சங்கப் பாடல்கள் கூறுகின்றன. ஏழில் மலையின் மேல் வளர்ந்த நொச்சியின் பூ விழும் ஓசையைக் கேட்டதாகக் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. ஆதலின் ஏழிலைப்பாலை மரத்தின் அப்பால் வளர்ந்த நொச்சி என்றே பொருள் கொள்ளவேண்டும். ஏழிலைப்பாலை மரம் இன்றும் ஏழில் மலையில் வளர்வதைக் காணலாம். ஏழில் மலைக்குச் சென்று நேரில் நான் ஆராய்ந்தபோது ஏழில்மலையே ஏழிலைப் பாலை மரங்கள் மிகுதியாகக் காணப்பட்டதால் பெயர் பெற்ற தென்பதைத் தெரிந்து கொண்டேன். காஞ்சி, வஞ்சி முதலிய பழைய நகரங்கள் மரத்தினால் பெயர் பெற்றன. அதே போல ஏழில் மலையும் 'ஏழில்' என்ற ஏழிலைப்பாலை மரத்தால் பெயர் பெற்றதென்றே கொள்ளவேண்டும். ஏழில் என்பதற்கு ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் யாழ் என்று பொருள் கொண்டு யாழ் வடிவாக மலையிருந்ததால் ஏழில் என்று பெயர் பெற்றதாகக் கூறினார். ஏழில் மலையை நேரில் சென்று பார்த்தபோது அது யாழ் வடிவமுடையதாகத் தெரியவில்லை. மற்றும் ஏழில் என்ற சொல் யாழைக் குறிப்பதாகத தெரியவில்லை. ஏழிலை என்பதே 'ஏழில்' என்று குறுகி ஏழிலைப்பாலை மரத்தைக் குறித்து வழங்கிப் பின்னர் அம் மரம் நிறைய வளர்ந்த மலையைக் குறித்தது. ஏழிலை மரத்தை வடமொழியில் 'சப்தபர்ணீ' என்று மொழி பெயர்த்து வழங்கினார்கள். ஏழிலைப்பாலை மரம் இன்றும் மலையாள மக்களின் வாழ்க்கையில் முக்கியமானதாகும். பாலை இனமரங்களில் ஏழிலைப்பாலைமரம் முக்கியமானதால் அதை வல்லியபாலை என்றழைக்கின்றனர். காளி வணக்கத்துக்கு இதன் இலைகளைப் பயன்படுத்துகின்றனர். வடமலையாளத்தில் விஷாரிகாவு என்ற ஊரில் உள்ள பெரிய காளிகோவிலில் இன்றும் கண்ணகியின் வரலாற்றைக் கூறும் தமிழ் மந்திரப் பாட்டு பாடப்படுகின்றது. இந்தக் காளிகோயிலின் துவக்க விழா ஏழிலைப் பாலை மரத்தினடியில் நடக்கின்றது. இந்த மரத்தையே முதலில் வலம் வருகின்றனர். ஏழிலைப் பாலை மரத்தின் இலைகளையும் சடங்கில் பயன்படுத்துகின்றனர். ஏழிலைப்பாலை மரத்தை மராத்தி மொழியில் 'சைத்தான்' என்று அழைப்பதைக் காணலாம். இந்த மரத்தில் பேய்கள் வாழ்வ

தாகவும் நம்பிக்கை உண்டு. காளிக்கு உகந்த மரமாதலால் இந்த நம்பிக்கை தோன்றியிருக்கும்.

ஏழிலைப்பாலை வளரும் ஏழில் மலையைப் பெயர்க்காரணம் தெரியாமல் இடைக்காலத்தில் ஏழுமலை என்றழைத்தனர். ஏழுமலைகள் இங்கே காணப்படவில்லை. மிகப் பிற்காலத்தில் பாமரமக்கள் ஏழில்மலையை எலிமலை என்று பேச்சுவழக்கில் கூறினர். அதையே வடமொழியில் மொழி பெயர்த்து 'மூஷிக சைலம்' என்றழைத்தனர். இங்கு வாழ்ந்த அரசர்களின் பரம் பரையைப் பற்றி மலையாளத்தில் 'மூஷிகவம்சம்' என்று நூலும் தோன்றியது. பழமலையைக் கிழமலையென்று வடமொழியாளர் அழைத்ததுபோல ஏழில் மலையை எலிமலையாக்கினர். இந்த எழில் மரத்தைப் பற்றிப் பரிபாடலும் கூறியுள்ளது

"அமர்ந்ததை புரையோர் நாவிற் புகழ்நலமுற்றி
நிரையே முடுக்கிய நீளிலைப்பாலை"

—பரிபாடல் 21 : 13 - 14 வரி.

நிரையாக ஏழு இலை அடுக்கிய நீண்ட இலைப்பாலை என்று ஏழிலைப்பாலை மரத்தைப் பரிபாடல் விளக்கியுள்ளது. ஏழு இலைகள் ஒரே வட்டமாக இருப்பதையே இது குறித்துள்ளது. செடி நூலாரும் இதைப்பற்றிக் கூறியுள்ளார். ஏழிலைப்பாலையின் பூ யானையின் மதநாற்றம் போல் வீசுவதால் திருப்பரங் குன்றத்தை யானைக்கு ஒப்பிட்டுப் பரிபாடல் கூறியுள்ளது. அதனால் திருப்பரங்குன்ற மலையில் அக்காலத்தில் ஏழிலைப்பாலை மரங்கள் நிறைய இருந்தன என்பது தெரிகின்றது ஏழிலைப் பாலை மரம் உயர்ந்தோர் நாவில் புகழ்பெற்றது என்று பரிபாடல் கூறியிருப்பதால் இந்த மரம் அக்காலத்திலேயே சிறப்புப் பெற்றது என்பது தெளிவாகின்றது. இன்றும் அந்தச் சிறப்பு மலையாள நாட்டில் இருப்பதால்தான் இந்த மரத்தை வல்லிய பாலை என்றும் மங்கலப்பாலை என்றும் மலையாளத்தில் அழைக் கின்றனர். மங்கலாதேவியான கண்ணகியின் வணக்கத்திற்கு உரிய மரமாயிருந்ததால் மங்கலப்பாலை என்று அழைக்கப்பட் டிருக்கலாம். ஏழில் என்ற சொல் சங்ககாலத்தில் ஏழிலைப்பாலை மரத்தைக் குறித்து வழங்கியிருக்க வேண்டும் என்று கருதலாம். இப்பெயரே நன்னன் ஆண்ட ஏழில் மலையையும் குறித்து வழங் கிற்று

———

சீகன் பால்குவின் தென்னிந்தியக் கடவுள்களின் கால்வழி*

[நூலகர்]

தமிழ் அச்சுக்கலையின் தந்தையெனப் போற்றத்தக்க பர்த்தொலொமேயு சீகன்பால்கு இந்தியாவில் கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற்காக முதன்முதல் வந்தவர். அவரை இந்தியப் புரொடஸ்டன் மிசன்களின் தந்தை என்றுங் குறிப்பிடுகின்றனர். கிறித்தவத் தமிழ் நூல்களை அச்சிடுவதற்கென்று தமிழகத்தின் சிற்றூர்களில் ஒன்றான தரங்கம்பாடியில் முதன் முதலாகத் தமிழ் அச்சகத்தை நிறுவியவர்.

செர்மனி நாட்டில் புல்சுநிட்ஸ் என்னும் ஊரில் சீகன்பால்கு 1682 சூன் 10 இல் தோன்றினார். சிறுவயது முதலே சமயத்தைப் பரப்ப வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் சமயக் கல்வியே பெற்றார். 23 வயது நிரம்பிய நிலையில் டேனிஷ் அரசரின் விருப்பத்திற்கிணங்க இந்தியாவிற்குக் கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற்காக அனுப்பப் பெற்றார். 36 வயது நிரம்பிய நிலையிலேயே இவ்வுலகை நீத்து இறையடியுற்றார். பதின்மூன்று ஆண்டுகள் அவர் தமிழகத்தில் சாதித்த சாதனைகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் அழியா இடம் பெற்றுள்ளன. உலகம் போற்றும் விவிலிய நூலை முதன்முதல் தமிழில் மொழிபெயர்த்த பெருமை அவரையே சாரும்.

கிறித்தவ சமயக் கோட்பாடுகளைக் கற்பிக்கவே அவர் தமிழகம் வந்தார். வந்தவுடன் அவர் கற்றுக் கொள்ளத் தொடங்கியது தமிழ் மொழியேயாகும். திண்ணைப் பள்ளியில் அவர் மாணவர்களுடன் அமர்ந்து 71 வயதினரான ஆசிரியரிடம் தமிழ் அரிச்சுவடியைக் கற்றார். சிறுவர்களோடு இருந்து தரையில் அமர்ந்து மணலில் அழகான தமிழ் எழுத்துக்களை ஒவ்வொன்றாக எழுதிக் கற்றார் சீகன்பால்கு. எழுத்துக்களை நன்கு கற்றவுடன் தமிழ், போர்ச்சுகீசு, டச்சு, செர்மன் முதலிய மொழிகளறிந்த தமிழர் ஆலப்பன் (அழகப்பன்?) உதவியுடன் தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களை நன்கு கற்றார். இலக்கியத் தமிழை நன்கு கற்ற பின்னரே விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்த்தார். தமிழை வெறும் கருவியாக மட்டும் படிக்கவில்லை.

* Genealogy of the South Indian Gods : a Manual of the mythology and religion of the People of Southern India by Bartholomaeus Ziegenbalg. Madras, 1869.

அதை ஆர்வத்துடனும் பயன்படுத்தினர். 'கிறிஸ்துமார்க்க அறிவு விருத்தி சங்கத்தார்' (S. P. C. K) ஒரு முறை அவருக்கு இலத்தீனில் பாராட்டுரை படித்தளித்தனர். அதற்கு அவர் தமிழ் மொழியில் நன்றி கூறி எல்லாரையும் வியக்கவைத்தாராம்.

'கிறிஸ்தியானி வணக்கம்' என்ற நூல் முதன் முதலில் தமிழில் கோவாவில் 1578 இல் அச்சிடப்பெற்றதென்றாலும் அம் முயற்சி நிலையாக அமையவில்லை. சீகன்பால்குதாம் முதல் தமிழ் அச்சகத்தைத் தரங்கம்பாடியில் அமைத்தார். அவர் விரும்பியவாறு கிறித்தவ நெறி பரப்பு சங்கத்தார் இங்கிலாந்திலிருந்து அச்சுப் பொறியையும் 100 ரீம் தாள்களையும் 1712இல் அனுப்பி வைத்தனர். "அக்கால மளவும் வார்ப்பிககப் பட்டிராத தமிழ் எழுத்துக்கள் முதல் முதல் ஹல்லே பட்டணத்தில் வார்ப்பிக்கப் பட்டன"* அவ்வெழுத்துக்கள் தரங்கம்பாடிக்குச் சீகன்பால்குவால் வரவழைக்கப் பெற்றன. அவற்றைக் கொண்டுதான் அவர் சில சிறு நூல்களையும் விவிலிய மொழிபெயர்ப்பையும் அச்சிட்டார்.

இத்தனை பணிகட்கிடையும் சீகன்பால்கு இந்து மக்களின் பல்வேறு பழக்க வழக்கங்களையும் அவர்கள் வணங்கும் தெய்வங்கள், அவற்றை வழிபடும் முறைகள் ஆகியவற்றையும் நுணுகி ஆராய்ந்து விரிவான, பயனுடைய, 'தென்னிந்தியக் கடவுள்களின் கால்வழி' என்ற நூலைச் செர்மன் மொழியில் இயற்றியுள்ளார். இது போன்ற நூலைச் சிலர் பின்னால் எழுதியிருப்பினும் இவ்வளவு செறிவாக அமையவில்லை.

இந்நூலுக்குத் தொடக்கத்திலேயே மேனாட்டில் எதிர்ப்பு இருந்தது. "இந்து சமயத்திலிருக்கும் மூடநம்பிக்கைகளைக் கண்டித்து இந்துக்களைக் கிறித்தவராக்க சீகன்பால்குவை அனுப்பினோமேயன்றி அம்மடமையை மேனாட்டிற் கறிமுகப் படுத்த அனுப்பவில்லை" என்று மேனாட்டார் எதிர்த்தனர். சீகன்பால்கு இந்நூலில் ஆங்காங்கு இந்து சமயத்தைக் கண்டித்திருப்பினும் பெரும்பாலும் இந்து சமய உண்மைகளை உள்ளபடி எடுத்துக் கூறியுள்ளார். கிறித்தவ சமயத்தைப் பரப்ப மேனாட்டிலிருந்து வரும் பாதிரிமார்கள் தாங்கள் எதிர்க்கும் மதத்தைப் பற்றி முழுதும் அறிந்துகொள்ள வேண்டுமென்றே சீகன்பால்கு இந்நூலை எழுதினார்.

சீகன்பால்கு இந்நூலை 1713இல் எழுதியிருப்பினும் நூற்றைப்பது ஆண்டுகள் கழித்து 1867இல் டாக்டர்.

---

* தரங்கை மிஷியோன் சரித்திரம்—சாமுவேல் ஐயர்—பக் 16.

ஜெர்மான் (Dr. Germann) என்பவர் முதலில் அச்சேற்றினார். 1869இல் இதன் ஆங்கில மொழிபெயர்ப்பைத் தவத்திரு மெட்ஜர் (Rev. G. J. Metzger) வெளியிட்டார்.

இதன் ஜெர்மன் மொழிப் பதிப்பைப் பாராட்டி டாக்டர் கால்டுவெல் 'மெட்ராஸ் டைம்ஸ்' இதழில் எழுதியுள்ளார். இந்நூல் குறிப்பிடத்தக்க நூல். படிப்பதற்கு இன்பமூட்டும் பயனுடைய இந்நூல் 154 ஆண்டுகள் பேழையிலே முடங்கிக் கிடந்து டாக்டர் ஜெர்மான் என்பவரால் வெளியிடப்பட்டுள்ளது. இந் நூலின் தலைப்பு குறிப்பிடுவதைப் போலத் தென்னிந்தியக் கடவுள்களின் கால்வழியை மட்டும் இதில் சீகன்பால்கு கூறவில்லை. ஒவ்வொரு கடவுளுடைய பெயர்கள், பட்டங்கள், இறைமைப் பண்புகள், உருவ அமைப்பு, வரலாறு, கோயில்கள், எழுந்தருளியிருக்கும் தலங்கள், வழிபாட்டு முறைகள், அவற்றுக் குரிய விழா, விரத நாட்கள், அவற்றின்மீது பாடப்பெற்ற பாடல்கள், நூல்கள் போன்ற எல்லாச் செய்திகளையும் சீகன்பால்கு தொகுத்துக் கொடுத்துள்ளார். மொத்தத்தில் இந்து சமயத்தை முழுதும் அறிந்து கொள்ளப் பயன்படும் நூல். 150 ஆண்டுகட்கு முன் இஃது எழுதப்பட்டிருப்பினும் கூட இன்றும் இதே நிலையிருப்பதால் இந்நூல் இன்றும் பயன்படக் கூடியது.

மேலும் இந்நூல் தென்னிந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் சிறப்பாகப் பயன்படக் கூடியது. ஏனெனில் இதுவரை வெளி வந்த நூல்கள் அனைத்தும் வடநாட்டைப் பற்றியவையே'' என்று பாராட்டிய டாக்டர் கால்டுவெல் இஃது ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வந்தால் நல்லது என்று எழுதியுள்ளார். அவர் அவா அடுத்த ஆண்டே நிறைவேறியதன் விளைவாய்த் தான் இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு வந்துள்ளது.

நூலின் முதற்பகுதியில் பரம்பொருள் என்று இந்துக்கள் எதைக் கருதுகிறார்கள் என்பதைச் சீகன்பால்கு விளக்குகிறார். பரம்பொருளில் சிவனும் சக்தியுமே அடங்குமென்கிறார். இரண்டாம் பகுதியில் மும்மூர்த்திகளின் குடும்பங்களை விளக்கு கையில் ஈசுவரன், அவருடைய மனைவிகளான பார்வதி, கங்கை, அவருடைய மக்களான விக்னேசுவரர், சுப்பிரமணியர், சுப்பிர மணியரின் மனைவியரான தெய்வயானை, வள்ளி; விஷ்ணு, விஷ்ணுவின் துணைவியரான லட்சுமி, பூமிதேவி, அவருடைய மகன் மன்மதன், மன்மதனின் மனைவி ரதி, மக்கள் குசலவ; பிரம்மா, அவருடைய மனைவி சரசுவதி ஆகிய கடவுளர்களின் சிறப்புகள் கூறப்படுகின்றன.

ஒவ்வொரு கடவுளின் தோற்றமும் ஒவ்வோர் அங்கமாக வருணிக்கப் பெறுகின்றன. கையில் ஏந்தியிருக்கும் பொருள்கள் என்னென்ன? உடலில் அணிந்திருக்கும் பொருள்கள் எவை யெவை போன்றவற்றிற்கு விளக்கம் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு கடவுளுக்கும் எத்தனை பெயர்கள் வழங்கப் பெறு கின்றன என்பதைச் சீகன் பால்கு பட்டியல் போட்டுத் தருகிறார். ஈசுவரன்—84; பார்வதி - 27; பிள்ளையார்—22; சுப்பிர மணியர்—28; விஷ்ணு—63; அப்பெயர்களில் சில சிறப்பாக வும் உள்ளன. ஈசுவரன் (பிறைசூடி, பேயோடாடி, பரியேறி, கடுக்கையன்). பார்வதி (அரனிடத்தவள், காமக்கோட்டத்தி). சுப்பிரமணியர் (சிலம்பன், செட்டி, வரைபகவெறிந்தோன்). விஷ்ணு (உலகுண்டபெம்மான், உந்திபூத்தோன், கொண்டல் வண்ணன்).

சிவன் கோவில், விஷ்ணுகோவில் போன்ற ஒவ்வொரு கோயிலிலும் என்னென்ன கடவுளர்கள் இருப்பார்கள் என்பதை வரிசையாகச் சீகன்பால்கு கொடுத்துள்ளார்.

கடவுள்கள்மீது பாடப்பெற்று மக்களால் போற்றப் பட்டு வந்த நூல்களையும் அவர் கொடுத்துள்ளார். அந்நூல்களில் சில இப்பொழுது வழக்கிலில்லாதவையாக உள்ளன. காயா ரோணவுலா (நாகை), உத்தரபோதம் (மயிலை), தேரூர்ந்த வாசகம் (திருவாரூர்) போன்ற நூல்கள் ஈசுவரன்மீது பாடப் பெற்றவை. 295 வெண்பாக்களாலான 'வள்ளியம்மை வெண்பா', வள்ளியின் கதையைக் கூறும் 'வள்ளியம்மனூர்' போன்ற நூல்கள் வள்ளிமீது பாடப்பெற்றவை.

பின்னிணைப்பில் கோயில்களில் நடைபெறும் வழிபாட்டு முறைகள், வளர்க்கப்பெறும் ஓமத் தீகளைப் பற்றிய செய்திகள், அச்சமயங்களில் ஓதப்பெறும் மந்திரங்களைப் பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

சிவன் கோயிலில் நடைபெறும் 'திருக்கலியாணம்' பெருமாள் கோயிலில் நடைபெறும் 'பெருமாள் திருநாள்', மற்றும் ஆயுதபூசை, பொங்கல் போன்ற திருவிழாக்கள் எவ்வாறு கொண்டாடப்படுகின்றன என்பதைச் சீகன்பால்கு விரிவாக விளக்கியுள்ளார்.

இந்து சமய தத்துவங்களான வேதாந்தம், விசிட்டாத் வைதம், துவைதம் போன்ற தத்துவங்களின் உட்கருத்துக்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

மூன்றும் பகுதியில் கிராம மக்களால் பரவப்பெறும் கிராம தேவதைகளான அய்யனர், எல்லம்மன், மாரியம்மன் போன்ற சிறு தேவதைகளைப் பற்றிய விளக்கத்தைக் காணலாம்.

இதற்குப் பின்னிணைப்பாக 'சாணர்களின் சமயம்' என்ற டாக்டர் கால்டுவெல்லின் கட்டுரை சேர்க்கப் பெற்றுள்ளது.

கடவுள்கட்கிணையாக மக்களால் எண்ணப்படும் தேவர்கள், ரிஷிகள், அட்டதிக்குப் பாலகர்கள் போன்ருேரின் செய்திகளை நான்காம் பகுதியில் காணலாம்.

இவ்வளவு அரிய செய்திகளைச் *சீகன்பால்கு* எவ்வாறு சேகரித்தார் என்பதே பெருவியப்பாக இருக்கின்றது. தாம் தொகுத்த செய்திகளனைத்தையும் சுவையாக நூல்வடிவில் வடித்துத் தந்துள்ள அவரை நாம் எவ்வளவு போற்றினாலும் தகும். சமய அறிவிற் சிறந்து விளங்கிய பேரறிஞர்களுடன் கடிதத் தொடர்பு கொண்டு பல தகவல்களைத் தொகுத்துள்ளார். நேரில் கண்டவர்களிடம் பல்வகை விளுக்களைத் தொடுத்து விளக்கம் பெற்றுள்ளார். சமய நூல்களைத் தாமே படித்துத் தமக்குத் தேவையான செய்திகளை எடுத்துள்ளார்.

கடவுளர்களைப் பற்றிய செய்திகளைத் தொகுத்ததோடு *சீகன்பால்கு* நின்றுவிடவில்லை. கடவுளர்களின் தோற்றங்களை ஓவியததில் வடிக்க எண்ணி இந்திய ஓவியர்களின் உதவியை நாடியுள்ளார். அவ்வாறு வரைதல் கூடாது என்று மக்கள் எதிர்க்க, அந்த எதிர்ப்பையும் சரிப்படுத்தி இரு திங்களில் தமக்குத் தேவையான ஓவியங்களை வரையச் செய்துவிட்டார். அப் பல்வண்ண ஓவியங்கள் இன்னும் ஆலந்து நாட்டில் உள்ளனவாம். அச்சிடுவதற்குப் பெருந்தொகை தேவைப் பட்டதால் அவற்றை அச்சிடாமலே விட்டுவிட்டனர்.

சிற்சில இடங்களில் இந்து சமயத்தைக் கண்டித்தாலும் பெருமளவில் இஃது இன்றும் பயன்படக் கூடிய நூலேயாகும். இதனை மறுபதிப்புச் செய்தால் நம் சமயத்தைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பும் பிறநாட்டறிஞர்கட்குப் பெரிதும் பயன் படும்.

இலக்கியப் பதிகம் வளர்ச்சி வரலாறு

[திரு. க. ப. அறவாணன் எம்.ஏ., பி.ஓ.எல்., எம்.லிட்.]

0. 1. பதிகம் என்பதன் பொருளும் வரையறையும் :

பதிகம் என்ற சொல்லிற்கு மூன்று பொருளைத் தருகிறது தமிழ் லெக்சிகன்.[1] பதிய வைத்தல், தெய்வத்தைப் பத்துப் பாக்களால் பாடும் பிரபந்தம், நூலின் முன்னுரை என்பன அம் மூன்று. யாப்பருங்கல உரையாசிரியர் (கி. பி. 10ஆம் நூற்).

'பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத் தொகுதியாகச் சொல்லுதல் தானே' என்ற ஒரு பழைய நூற்பாவைப் பதிக இலக்கணமாக எடுத்துரைக்கிறது. இதனையே யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியரும் நன்னூல் உரையாசிரியர் சங்கர நமச்சிவாயரும் (நன். 1) காட்டுவர். "மேல் வகுக்கும் ஐந்து பொதுவும் (நூ. 3) பதினொரு சிறப்புமாகிய (நூ. 47, 48) பல்வகைப் பொருளையும் தொகுத்துச் சொல்லுதலின் பதிகம்" என்றெழுதுவர். இவ்விளக்கங்கள் பதிற்றுப்பத்துப் பதிகங்களை அடியொற்றி எழுந்தவை.

நான்கடி முதல் எட்டடி வரையிலுள்ள வெண்பாவை வைத்து, ஆசிரியத் துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் ஆகிய செய்யுட்களால், பத்து அல்லது இருபது பாக்களால் இயற்றப்படுவது பதிகம் என்ற விளக்கத்தைப் பன்னிரு பாட்டியல் தருகின்றது. "ஆசிரியத் துறை அதனது விருத்தம் கலியின் விருத்தம் அவற்றின் நான்கடி எட்டின் காறும், உயர்ந்த வெண்பா மிசைவைத் தீரைந்து நாலைந்து என்னப் பாட்டுவரத் தொடுப்பது பதிகமாகும்" (பன். கி. பி. 10. நூற். நூற்பா. 197). இவ்விதி, பதிகம் என்ற பெயரில் எழுந்த பிரபந்தங்களைப் பின்பற்றி எழுதப்பட்டதாகும். இவ் விதியும் முற்றும் பின்பற்றப்படவில்லை. இவ்விரு தலைமைச் செய்திகளை நோக்கப் 'பதிகம்' என்பது வேறுவேறு பொருளில் விளக்கப்பட்டு வந்துள்ளமை புலனாகிறது.

1. 0. பதிக வரலாறு : 1. 1. நூலின் கருத்தைப் பதிய வைப்பதே பதிகம் :

பதிற்றுப்பத்துப் பதிகங்களே தமிழில் மிகத் தொன்மை யானவை. ஒவ்வொரு பத்தின் இறுதியில் முடிப்பு ஆகத்தான்

1. தமிழ் லெக்சிகன், ப 2478.

இவை இடம்பெற்றுள்ளன. அவை அமைந்துள்ள முறை பின்வருமாறு: (1) முதற்பகுதி ஆசிரியப்பாவில். அஃது ஒவ்வொன்றும் புலவர் பெயருடன் 'பாடினார் பத்துப்பாட்டு' என்று முடிந்திருக்கும். (2) கருப்பொருள் தொகுதி. ஒவ்வொரு பாட்டின் அரும் பொருள் தொடர் பெயராகச் சூட்டப்பட்டு, 'அவைதாம் எனத் தொடங்கி இவை பாட்டின் பதிகம்' என்று முடியும். (3) பாடிப் பெற்ற பரிசில் எனும் தலைப்பில், பாடினதற்காக அரசன் புலவனைப் புரந்த செய்தி கூறப்பட்டிருக்கும். (4) பாட்டுடைத் தலைவன் ஆட்சி புரிந்த ஆண்டு அவன் பெயருடன் பொறிக்கப்பட்டிருக்கும். இவற்றுள், முதற்பகுதி மட்டுமே அகவல் பா நடை. பின் மூன்றும் உரை நடை. இந் நான்கும் முறை பிறழாமல் ஒன்றைப் போல எல்லாப் பத்திலும் இடம் பெற்றிருத்தல், நடை, போக்கு ஆகியன அனைத்துப் பத்துக்களிலும் ஒத்திருத்தல் பதிற்றுப்பத்துக்களின் ஆசிரியர் பலர் எனினும், பதிக ஆசிரியர் ஒருவரே என உய்த்துணர வைக்கின்றன.

1.1.1. பதிக ஆசிரியர்: பதிற்றுப்பத்துப் பதிகங்களின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பதிற்றுப் பத்துக்களைப் பாடியவர், தொகுத்தவர், பதிகம் பாடியவர், உரைகாரர் என்ற இவர் அனைவரும் வேறு வேறு காலத்தினர் என்பர்.[1] இவ்வாறு கூருது, தொகுத்தாரையும் பதிக ஆசிரியரையும் ஒருவரே எனக் கூறல் தகும். பதிக ஆசிரியரும், பாட்டின் ஆசிரியரும் ஒருவரல்லர். காணம் (7, 8, 9. பதி) சாந்தி (9. பதி) என்ற சொற்கள் சங்கம் மருவிய காலத்தில்தான் செல்வாககுற்றன. இவை பதிகத்தில் இடம் பெற்றுள்ளன. அன்றியும் ஒவ்வொரு பதிகத்திலும் 'இவை பத்துப்பாட்டு' என்பது முடிப்புரையாக வந்துள்ளது. பத்துப்பாட்டு என்ற தனி இலக்கியத் தொகுதி ஏற்படும் முன்னரே இவ்வாறு குறிக்கப்பெற்றது எனலே பொருத்தம். தன் காலத்திலேயே பத்துப்பாட்டு என்ற வழக்கு இருந்திருக்குமானல், தானும் அவ்வாறு எழுதி, பொருள் மாருட்டத்திற்கு இடம் அளித்திருக்க மாட்டார். ஆக, நூல் எழுதப்பட்ட காலத்திற்குப் பின்னும், தொகை முயற்சி பெருகுவதற்கு முன்னும் இப் பதிக ஆசிரியர் இருந்தவராதல் வேண்டும். இவரால் இயற்றப்பட்ட பதிகப் பொருளை நுணுகி நோக்கும் பொழுது, பாட்டு அல்லது நூலின் பொருளைச் சுருங்கிய அளவில் உள்ளத்தில் பதிய வைக்கும் பா அமைப்பு என்று கொள்ளலாம். பதி + அம் < பதியம் < பதிகம் என்ருகி யிருத்தல் வேண்டும். பதியம், பதிகம் என்ற சொற்களின் ஊடே இருக்கும் ஒற்றுமை

---

1. பதிற்றுப்பத்து, மர்ரே, 1957. முகவுரை. ப. 4.

யைத் தமிழ் லெக்சிகன் குறிப்பாக நினைவுபடுத்துகிறது.[1] தேவாரத் திருப் பதிகங்களைத் 'திருப்பதியம்' என்றே கல்வெட்டுகள் குறிக்கின்றன. 'திருப்பதியம் பாடும் பெரியோன்' எனத் தஞ்சைத் திருக்களர்க் கல்வெட்டும் (S. I. I. vol. 8 No. 260), 'திருப்பதிகம் விண்ணப்பம் செய்யும் அம்பலத்தாடி' எனத் திருச்சி அவ்வூர்க் கல் வெட்டும் (Ibid. No. 675) இச் செய்தியை உறுதி செய்கின்றன.

1.1.2 பதிகமும் மெய்க்கீர்த்தியும்: இப் பதிகமும், பிற்காலச் சோழர்காலத்து எழுந்த மெய்க்கீர்த்தியும் ஒத்துள்ளன. பொருளிலும் நடையிலும் போக்கிலும் இவ்விரண்டும் ஒத்திருப்ப தால் பதிகத்தின் வளர்ச்சியே மெய்க்கீர்த்தி என்பர்.[2] இக் கருத்துப் பெரும்பாலும் பொருந்துவதே. பன்னிருபாட்டியலில், பதிக இலக்கணத்தை அடுத்து மெய்க்கீர்த்தியின் இலக்கணம் கூறப்பட்டதும் இக்காரணம் பற்றியே போலும்.

1. 2. பதிகம் இலக்கிய முகப்பு ஆன நிலை :

பதிற்றுப்பத்துப் பதிகங்களைத் தொடர்ந்து சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, நீலகேசி ஆகிய நூல்களில் பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. இவையனைத்தும் பதிகங் களே. 'பால் வகை திரிந்த பதிகம்' எனவரும் சிலப்பதிகாரப் பதிகவரியும் (90), 'ஈரேனோர்க்கு உரைப்பாம் பதிகத்துள் இயன்ற வாறே' எனவரும் சிந்தாமணிப் பதிகவரியும் (21), அவை யனைத்தும் பதிகம் எனும் தலைப்பில் அமைக்கப்பட்டிருப்பதும் இதனை வற்புறுத்தும். **நூலின் பொதிபொருளை இப் பதிகங்கள் பதிய வைத்திருக்கின்றன என்ற அளவில் பதிற்றுப்பத்துப் பதிகங்களுக்கும் இவற்றிற்கும் ஒற்றுமை. பிற கூறுகளில் முற்றும் வேறுபட்டவை.** அவ்வேறுபாடுகள் பின் வருமாறு: (1) பதிகம் வரலாற்றுப் பாக்களின் பிற்சேர்க்கை. சிலம்பு முதலானவற்றுப் பதிகங் களோ காப்பிய முற்சேர்க்கை. (2) பதிற்றுப்பத்தில் பதிகம் முடிப்பாக உள்ளது. பிறவற்றிலோ முகப்பாக உள்ளது.[3]

---

1. தமிழ் லெக்சிகன். ப 2478-4.

2. சதாசிவ பண்டாரத்தார்: டி. வி. இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும் 1961. ப 187.

3. பதிற்றுப்பத்து. சை. சி. கழகம். ஔவை சு. துரைசாமிப் பிள்ளை பதிப்பு. பதிகம் பா முன்பாகப் பதிக்கப்பட்டுள்ளது. இவ் வமைப்பு வேறு பதிப்புகளில் இல்லை.

(3) பதிற்றுப்பத்து, சிலம்பு, மேகலைக்குரிய பதிகங்கள் நூலாசிரியரால் எழுதப்பட்டன அல்ல. (4) சிந்தாமணி, நீலகேசிப் பதிகங்கள் நூலாசிரியராலேயே படைக்கப்பெற்றன. அவை கடவுள் வணக்கம், அவையடக்கம் என்பவற்றை அடுத்து வருகின்றன.

1. 2. 1. பதிகத்தின் இடமாற்றம்:

பதிற்றுப் பத்துத் தொகுப்புக் காலத்தில் முடிப்புப் பகுதியாக இருந்த பதிகம், பின்னர் முகப்புப் பகுதியாக மாறிவிட்டமை முதன்மையான மாற்றம். இம மாற்றம் ஏன் நிகழ்ந்தது? எப்படி நிகழ்ந்தது? பதிற்றுக்கு பதிகம் கி. பி. 2 நூற். அல்லது அதற்கு முற்பட்டது என்றால், மற்றவை பதிற்று. அடுத்துத் தோன்றியவை சமஸ்கிருதத்தில் இலக்கியங்களில் நூன்முகப் பாக, நூல் அடக்கத்திற்குப் புறம்பாக 'பதிகா' என்ற பகுதி இடம் பெறும். கி. பி. 3 நூற்.க்குப் பின், களப்பிர, பல்லவர் காலங்களில் தமிழகத்தில் சமஸ்கிருதக் கல்வியும், கடன் வாங்கலும் பெருகின. அணியிலக்கணத்தின் பல வேண்டா விரிந்த பிரிவுகளும், பிரபந்த இலககியங்களுள் மஞ்சரி, மங்கலம் முதலான சிலவும் ஆரியத் தாக்கம் பெற்றிருப்பது வெளிப்படை. பதிகம் என்ற முன்னுரை யமைப்பும், சமஸ்கிருதத்தாக்கத்தால் இடம் பெயர்ந்தது போலும்.

1. 2. 2.

பதிற்று. பதிகமும், சிலம்பு. பதிகமும் வேறுவேறு காலத்தன; நோக்கின; போக்கின என்னும்போது அவை இரண்டும் ஒரே சேரன் செங்குட்டுவன் பெருமை பேசுவன ஆயிற்றே என்று சிலர் கருதல் கூடும். சிலம்பும், அதற்குள்ள பதிகமும் முரண்பாடானவை. நூல் நுவல் பொருளுக்குப் புறம்பாக, பதிகம் சிலவற்றைப் பேசுவதால், அவை இருவேறு ஆசிரியர் களின் படைப்பு என்பது தெளிவாகிறது. சிலம்பு. பதிகம், மிகப் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது என்பது அறிஞர் முடிபு.[1] சமஸ்கிருத அறிவாலும், உணர்வாலும், பதிகம் என்ற முன்னுரை தனிச் செல்வாக்குப் பெற்றபோது, நெஞ்சை அள்ளும் சிலம்பிற்குப் பதிகம் இல்லையே என்றெண்ணி, பின் வந்தவர், தாமே எழுதிச் சேர்த்திருத்தல் கூடும்.

1. சிவஞானம். ம. பொ. சிலப்பதிகாரத் திறனாய்வு. 1973 ப 1.

1.2.3. பதிகத்தின் தொடக்க வரலாறு :

பெயர்	வரிகள்	பாடியவர் பெயர்	யாப்பு
பதிற்று 2ஆம் பத்தின் பதிகம்	14	தொகுப்பாசிரியர்	அகவல்
3 ,,	12	,,	,,
4 ,,	14	,,	,,
5 ,,	24	,,	,,
6 ,,	14	,,	,,
7 ,,	13	,,	,,
8 ,,	12	,,	,,
9 ,,	18	,,	,,
சிலப்பதிகாரப் பதிகம்	90	தெரியவில்லை	அகவல்
மணிமேகலைப் பதிகம்	98	,,	,,
சீவகசிந்தாமணி	96 (24 × 4)	நூலாசிரியர் திருத்தக்கதேவர்	விருத்தம்
நீலகேசி	8 (2 × 4)	நூலாசிரியர்	விருத்தம்
திருவாலங்காட்டு மூத்த திருப் பதிகம்	1 + 10 பாக்கள் 40 வரிகள்	காரைக்கால் அம்மையார்	விருத்தம்

1. 3. பதிகம் தனிப் பிரபந்தமாக ஆனநிலை :

ஒரு பொருளைக் குறித்துப் பத்துச் செய்யுட்களால் பாடப் பெறுவது பதிகம். நூலின் கருத்துப் பொதிநிலை என்ற முடிப்புரை நிலை மாறி, சிலம்பின் காலத்தில் முகவுரையாக மாறிய பதிகம் என்ற சொல், கி. பி. ஆறும் நூற்றுண்டளவில், பத்துப் பாடல்களை யுடைய ஒரு பிரபந்தம் என்ற பொருளினும் வழங்கத் தொடங்கிவிட்டது பத்து+இயம் =(பத்தால் இயங்குவது)>பத்தியம்>பதியம்>பதிகம் என்ருகி இருத்தல் கூடும். நூறு பாக்களையுடைய பாத்தொகுதி சதகம் (திருவாசகம்—திருச் சதகம்) என்று வழங்கியதை ஒட்டி ஒப்புமை யாக்கமாக (Analogy) பதியம், பதிகம் என்ருயினது போலும். தேவாரத் திருப்பதிகம் ஓதுவாரை, "திருப்பதியம் பாடுவார்" என்று இரண்டாம் நந்தி வர்மனின் (கி. பி. 750) திருவல்லம் கல்வெட்டுக் குறிப்பதும், "திருப்பதியம் விண்ணப்பம் செய்ய உடையார் ஸ்ரீ இராஜ ராஜ தேவர் குடுத்த பிடாரர்கள்" என முதல் இராசராசனின் (கி. பி. 1014) தஞ்சைக் கல்வெட்டுக் குறிப்பதும் காண்க. பத்துப் பாடல்களான பதிகங்களையே, இவை பதியம் என்று சுட்டுகின்றன. அவை இறைவன்மேல பாடப்பட்டன ஆதலால், 'திரு' என்ற அடை சேர்க்கப் பெற்றுத் திருப்பதிகம் என்று

போற்றப்பட்டன. நூலின் முகப்புறுப்பாக இருந்த பதிகம், காலப்போக்கில் தனி நூலாகவே பிரிந்துவிட்டது. ஆற்றுப் படை, தூது முதலான பழந்தமிழ்ப் பாவுறுப்புகள், பிரபந்த காலத்தில் தனிப் பிரபந்தமாயினமை காண்க.

1. 3. 1. திருப்பதிகங்களின் காலம்:

இறைவனைச் சார்ந்து பாடப்பெறும் பதிகங்கள் அனைத்தும், அவை எச்சமயத்தன ஆயினும் திருப்பதிகம் எனப்பட்டன. புத்தர் மீது பாடப்பட்ட நூல் ஒன்றிற்குத் திருப்பதிகம் என்றே பெயர். திருநாமப்பதிகம் (1874), தோத்திரப் பதிகம் (முகமது சுல்தான்), நேமிநாதர் பதிகம் முதலாயின முறையே வைணவ, இசுலாமிய, சமணச் சார்பின. சைவச் சார்பான பதிகங்கள் பல, தேவாரத் திருவாசகத்திலும், பதினோராம் திருமுறையிலும் பல இடம்பெற்றுள்ளன. தனியேயும் பல பாடப்பட்டுள்ளன. இப் பதிகங்களின் காலம் கி. பி. 10 ஆம் நூற். என்பர். அது பொருந்தவில்லை. கி. பி. 5 அல்லது 6 ஆம் நூற். அளவிலேயே இத்தகு பதிகங்கள் தோன்றத் தொடங்கி விட்டன. இதே காலத்தைச் சேர்ந்த காரைக்கால் அம்மையார் எழுதிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்ற இரு பதிகங்கள் பதிகப் பிரபந்தத்தின் தொடக்கக் காலத்தை எடுத்துக் காட்டு கின்றன. கி. பி. 7, 8, 9 ஆம் நூற்.களில் எழுந்த தேவாரப் பாக்கள் திருப்பதிகம் எனக் குறிக்கப்படுகின்றன. கோயில் திருப்பதிகம், திருப்பாண்டிப்பதிகம், எண்ணப்பதிகம், கோயில் மூத்த திருப்பதிகம், திருக்கழுக்குன்றப் பதிகம், அச்சோப் பதிகம் எனத் திருவாசகத்துள் இடம் பெற்றுள்ள திருப்பதிகங் களும், திருப்பதிகப் பழமையை வற்புறுத்தும். ஏறத்தாழ 86 பதிக நூல்கள்[1] எழுதப்பட்டுள்ளமை, பதிகப் பிரபந்தத்தின் பெருவளர்ச்சியைக் காட்டும். பண்டைய பதிகத்திற்கும், பிரபந்தப் பதிகத்திற்கும் பெயர் ஒற்றுமை தவிர, பிற ஒற்றுமை ஒன்றும் புலனாகவில்லை.

1. 3. 2. திருப்பதிகம் என்ற பெயர்க் காரணம்:

நூற்பொருளின் தொகுதி பதிகமாயிருந்தது என்ற நிலை மாறி நூலே 'பதிகம்' என்றாயின நிலை வியப்பிற்குரியது. தமிழகத்தில் தொகை முயற்சி நடந்தபோது பத்து என்ற எண்ணிக்கை செல்வாக்குப் பெற்றது. பத்துப்பாட்டு, பதிற்றுப்

---

1. கந்தையா பிள்ளை. ந. சி. தமிழ் இலக்கிய அகராதி 1952 என் பதை வைத்து எடுக்கப்பட்ட கணக்கு.

பத்து ஆகியவை, ஐங்குறுநூற்றில் இடம் பெற்றுள்ள எருமைப் பத்து, சிறுவெண்காக்கைப் பத்து முதலானவை, திருக்குறள், நாலடியார் என்பன பப்பத்துப் பாக்களைத் தனி அதிகாரமாக வகுத்த நிலை முதலானவை, இலக்கியத் தொகுப்பாசிரியரிடம் பத்து என்ற எண்ணின்மீதுள்ள ஈடுபாட்டைக் காட்டுகின்றன. இந்த ஈடுபாடே பத்துப்பாக்கள் அளவில் கருத்து முற்றுப் பெற்றிருந்த நூல்களைப் பதிகம் என்று அழைக்கச் செய்தன போலும்.

1. 3. 3. பதிகமும் பத்தும் :

தொண்ணூற்றாறு பிரபந்தங்களுள் பதிகம், பத்து என்ற இரண்டும், தனிப்பிரபந்தங்களாகக் கொள்ளப்படுகின்றன. ஒரே எண்ணிக்கையுடைய பாத்தொகுதிக்கு இருவேறு பெயர் கொடுத்தமைக்குக் காரணம் தெய்வத் தொடர்பான துதிப் பாடல்கள் பத்தைப் பதிகம் என்றும், பிறவற்றைப் பத்து (நயனப்பத்து, பயோதரப்பத்து) என்றும் வேறுபடுத்திக் குறித்தார் போலும்.

2. 1. பதிகமும் பாயிரமும் :

பொதுவாக, பாயிரம், இலக்கண முகப்பாகவும், பதிகம், இலக்கிய முகப்பாகவும் இடம் பற்றி இருந்தன. காலப்போக்கில் இலக்கிய முகப்பும் பாயிரம் எனப் பெயர் எய்தலாயிற்று. கம்பன், வில்லி நூல்களின் முகப்பு, பாயிரம் என்றே பொறிக்கப் பட்டுள்ளது. பதிகம், கி. பி ஆறும் நூற்றாண்டளவின் தனிப் பிரபந்தப் பெயராக அமைந்த நிலையில் இலக்கிய முகப்பையும் 'பதிகம்' என வழங்குவது பிறழ்ச்சியை உண்டாக்கும் எனக் கருதி இலக்கிய ஆசிரியர்களும் 'பதிகம்' என்ற பெயராட்சியை விட்டனர் போலும். இதனால்தான் இறையனார் களவியல் உரையாசிரியர், யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர், இளம் பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோர், பாயிரம் என்பதை மட்டுமே விளக்கி, பதிகம் என்பதை விளக்காது விட்டனர். எனினும் இலக்கிய இலக்கண வரலாற்றுணர்வோடு நூல் எழுதிய பவணந்தி, நன்னூலில், 'முகவுரை, பதிகம், அணிந் துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை பாயிரம்' என்று நூற்பா (1) அமைத்தனர். பதிகம், பாயிரம் என்பத னோடு ஒன்றிவிட்டதை நன்னூல் நூற்பாக் காட்டுகிறது. 'அவன் மைந்தன் வரந்தருவான் இப்பதிகம் செப்பினனே'' என்ற சிறப்புப்பாயிரம் எனும் தலைப்பில் இடம்பெற்றுள்ள வரந்தருவாரின்

பாரதப் பாயிரம் (29) பதிகப்பாயிரத்தில், 'அரித்த நாரீஸ்வர' ஒன்றிப்பை உறுதி செய்கிறது.

3.1. பாயிரம்—பதிகம் வேறுபாடுகள் :

பதிகம், பாயிரம் என்ற இரண்டும் ஒன்றி ஒரே பொருளில் வழங்கத் தொடங்கின. எனினும் இவை இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. அவை பின்வருமாறு :

பாயிரத்திற்கும் பதிகத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் :

பாயிரம்	பதிகம்
1. தொல்காப்பியத்திலேயே உள்ளது	1. தொல், இல் இல்லை
2. அகநானூற்றில் நூல்முடிவில் இடம் பெற்றுள்ளது	2. பதிற்றுப் பத்தின் முடிவில் உளது
3. செய்யுள் வடிவினது	3. செய்யுள், உரைநடை என்ற இரண்டாலும் இயலுவது
4. பெரும்பாலும் இலக்கண முகப்பு	4. பெரும்பாலும் இலக்கிய முகப்பு
5. தனிப்பிரபந்தமாக உருவாக வில்லை	5. தனிப் பிரபந்தமாக ஆயிற்று
6. பொதுசிறப்பு என்ற பாகுபாடு உண்டு	6. அத்தகு பாகுபாடில்லை
7. இறையனார் களவியல் உரை, இளம்பூரணர் நச்சினார்க்கினியர், யாப்பருங்கல உரை விளக்கப்படுவது	7 உரையாசிரியரால் பேரளவு விளக்கம் பெறாதது
8. நூல், நூலாசிரியர் வரலாற்றைப் பெருகப் பேசுவது	8. நூல் நுவல் பொருளின் அமைப்பையே பெருகப் பேசும்
9 வரி வரையறை இல்லாதது	9. வரி வரையளவு உடையது
10 பொதுப்பாயிரம் 5 என்றும், சிறப்புப் பாயிரம் 11 என்றும் உட்பிரிவுகளை உடையது	10. உட்பிரிவுகள் எதுவும் இல்லாதது
11. மங்கலச் சொல்லால் தொடங்கும்	11. அத்தகு வரையறை, மரபு எதுவும் இல்லை

4. 1. முடிப்பு :

பதிகம் என்பது மூன்று கட்டமாக வளர்ந்திருக்கிறது. முதற் கட்டத்தில் நூல் நுவல் பொருளின் சுருக்க அடக்கமே பதிகமாய் இருந்தது. இரண்டாம் கட்டத்தில் அதே பொருளில் இருந்தாலும், முடிப்பாக இருந்த நிலையினின்று முகப்பாக மாறியது. அதனுடன், பின்னொருவரால் எழுதிச் சேர்க்கப் பெறுதல் என்ற நிலையுடன், நூலாசிரியரே எழுதுவது என்ற நிலையை எய்தி இருக்கிறது. மூன்றாம் கட்டத்தில், நூலின் உறுப்பாக இருந்த நிலை மாறி, தனிப் பிரபந்தமாகக் கிளைத் திருக்கிறது. இக் கட்டத்தில் ஏற்படும் உறழ்ச்சியைத் தவிர்க்க, இலக்கிய முகப்பாக இருந்த பதிகம் முற்றும் விலக்கப்பட்டு, பாயிரம் என்ற ஒரே பெயரில் ஒன்றியிருக்கிறது. இதுவே பதிகம் என்பதன் வளர்ச்சி வரலாறு ஆகும்.

வடமொழிக் கலப்பு ஏற்பட்டது எப்படி ?

"திருவள்ளுவர் காலத்துக்கு ஒரு நூற்றாண்டு கழித்துத் தோன்றிய 'சிலப்பதிகார' 'மணிமேகலை' காலத்திருந்து, அவர்க்குப்பின் ஓராயிரத்து முந்நூறியாண்டு வரையிற் றோன்றிய இடைக்காலத்துத் தமிழாசிரியர் அத்தனை பெயரும், தமக்கு முன்னிருந்த பண்டைத் தமிழாசிரியர் ஆழ்ந்தாராய்ந்து கைக்கொண்ட கொள்கைகளையே ஓர் இம்மியளவும் பிழையாது தாமும் தழீஇ அவற்றிற் கடைப்பிடியாய் நின்றனரேனும் வட நாட்டினின்றும் புகுந்து வைகிய பௌத்த சமணர் மாயாவாத வைணவப் பார்ப்பனர் முதலாயினார்க்கு மெய்யறிவுச்சுடர் கொளுவுதற் பொருட்டு, அவர் கொணர்ந்து மிகுத்து வழங்கிய வடமொழியைத் தாமுங் கையாண்டு தம்முடைய கோட்பாடுகளை விளக்குஞ் சொற்கள் சொற்றொடர்கள் குறியீடுகள் கதைகள் முதலானவற்றை வடமொழியிலேயே தாமும் வழங்கத் தலைப்பட்டனர்.

—**மறைமலையடிகள்.**

(முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக். ௧௬-௧௭).

தமிழில் எழுதுவோம்

[ஆட்சிச்சொற் காவலர் கீ. இராமலிங்கனார் எம். ஏ.]

(முன்பரல் செகூஆம் பக்கத் தொடர்ச்சி)

10. பொது வகை பிழை சில

உச்சரிப்புக் குறைபடாமல், திருத்தமாக, தமிழைப் பேசும் பழக்கம், நமக்குக் குன்றிவிட்டிருக்கிறது. அதற்குச் சில காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கியமானது பிறமொழிகளின் வரவும் நடமாட்டமுமேயாகும். அவற்றின் விளைவாகத் தமிழை அம் மொழிக்கு இயல்பாக அமைந்த ஒலியுடன் பேசமாட்டாத நிலைக்கு இழிந்துவிட்டிருக்கிறோம். தமிழகத்தின் தென்பகுதிக்குச் செல்லச் செல்ல, உச்சரிப்புச் சிறிது இயல்பாக இருப்பதைக் காண்கிறோமாயினும், தென் கோடியிலும் இன்னமும், தமிழ் பேசுவதில் குறைபாடுகள் இல்லாமல் இல்லை. திருத்தமாகப் பேசத் தவறுதலால் அக் குறை எழுதுவதிலும் புகுந்து விடுகிறது.

இன்னொரு பெரிய காரணம் நமது விழிப்பின்மையேயாகும். உச்சரிக்கும்போது வழு இல்லாமல் உச்சரித்தும், எழுதும்போது மட்டும் உச்சரிக்கின்றபடியே எழுத வேண்டுமே என்னும் கவனமே நமக்கு இருப்பதில்லை. பேசும்போது, ‘எனக் கூறினேன்’ என்று திருத்தமாக உச்சரித்துவிட்டு, வரையும் போது மட்டும், ‘க்’ எழுத்தை இடையில் இடாமல் ‘என கூறினேன்’ என்று வரைந்து விடுகிறோம். இப்படியே, ‘திருப் பெயர்’, ‘திரு பெயர்’ ஆகிவிடுகிறது; ‘அறக்கொடை’, ‘அற கொடை’ என எழுதப்படுகிறது. இங்ஙனே இதுபோன்ற பிறவும், ‘மாடுகள் வந்தது’ என்று பேசவும் செய்கிறோம். எழுதியும் விடுகிறோம். ‘மாடுகள்’ பன்மையாயிற்றே, அச் சொல்லுக்கு ஏற்ற வினைச்சொல், ‘வந்தன’ என்றல்லவோ இருக்க வேண்டும், என்று சிறிது உன்னிப்போமானால், ஒருமை பன்மை பிழைகளே நேரா.

ஒருமை பன்மை :

ஒருமை பன்மை பிழைகளில் சில நுணுக்கங்கள் பற்றி சென்ற அதிகாரத்தில் குறிப்பிடப்பெற்றன. இரண்டொன்று ஈண்டுக் கூறினால் சாலும். ‘எனது நூல்கள்’ என்று எழுதுகிறோம். இது தவறு. ‘எனது’ என்னும் சொல் எனக்கு உரிய அஃறிணைப் பொருள் ஒன்றைக் குறிக்கிறது. ‘எனது நூல்’ (என்அது நூல் என்பது திருத்தமான வடிவம்.) எனக்கு உரிய ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களைக் குறிக்க வேண்டுமானால்

'என்னுடைய நூல்கள்' என்று எழுத வேண்டும். இதனைச் சுருக்கி 'என் நூல்கள்' என்போம். அப்படியே 'எனது நூல்' என்பதையும் சுருக்கமாக 'என் நூல்' என்போம். 'என்' என்னும் சொல், 'நூல்' என்னும் சொல்லுக்கு முன்பு வரும் போது 'எனது' என்றும், 'நூல்கள்' என்னும் சொல்லுக்கு முன் வரும்போது 'என்னுடைய' என்றும் பொருளாகும். 'அடி முடி இதுவென உணர்த்தினர்' என்பது பிழை. 'இவை' என்று இருக்க வேண்டும். 'எனது நண்பர்கள்' என்று எழுது வதில் இரண்டு பிழைகள் இருக்கின்றன. ஒன்று 'நண்பர்கள்' என்னும் பன்மைக்கு 'என் அது' என்னும் ஒருமை அடை மொழியை இடுவதாகும். மற்றொன்று 'அது' அஃறிணைப் பொருளைக் குறிக்கும் சொல். 'நண்பர்கள்' உயர்திணைப் பெயர். எனவே திணைப்பிழையும் நேர்கிறது. 'எனது தந்தை', 'எனது அன்னை', என்பவற்றிலும் இத் திணைப் பிழை இருப்பதை அறியலாம். 'என் தந்தை', 'என் அன்னை' என்று எழுத வேண்டும். இவற்றில் 'என்' என்னும் சொல், 'எனக்கு' என்னும் சொல்லின் சுருக்கம், 'எனக்குத் தந்தை', 'எனக்கு அன்னை' என்பவற்றையே 'என் தந்தை!' 'என் அன்னை' என்கிறோம்.

சந்திப் பிழைகள் :

சந்திப் பிழைகளைப் பற்றியும் சென்ற அதிகாரத்தில் குறிப் பிட்டிருந்தேன். ஒரு சொல்லும் ஒரு சொல்லும் சேரும்போது, இடையில் புது எழுத்துத் தோன்றுவது ஒருவகை சந்தி. இன்னொரு வகை சந்தியில் இடையில் எழுத்துக்கள் உரு மாறும். இவ் இரண்டில், முதல்வகைச் சந்திகளில் பிழை நேராமல் காத்துக்கொள்வது இன்றியமையாதது. இரண்டாவது வகைச் சந்திகளில் இடையில் மாற்றம் இல்லாமல் எழுதுவதால் குறையில்லை. இதுவே பல தமிழறிஞர்களின் கருத்து. இஃது அவர்கள் கையாளும் முறையும் ஆகும்.

முதல் வகை :

பிழை	திருத்தம்
கை பட	கைப்பட
அதை கொடுத்தேன்	அதைக் கொடுத்தேன்
மிக பொருத்தம்	மிகப் பொருத்தம்
இதற்கு தேவை	இதற்குத் தேவை
மர பெயர்	மரப்பெயர்
சிரா பள்ளி	சிராப்பள்ளி

மதுரை கல்லூரி	மதுரைக் கல்லூரி
வாழ்த்தி சென்ருர்	வாழ்த்திச் சென்ருர்
கணு கண்டேன்	கணுக் கண்டேன்
ஆற்று படை	ஆற்றுப்படை
உர தொட்டி	உரத்தொட்டி

மேற்கண்ட சொற்களிலும், இவைபோன்றவற்றிலும் இடையில் 'க்', 'ச்', 'த்', 'ப்' இவ்வெழுத்துக்கள் இடப்பெறவில்லை யாளுல், ஓசை இழுக்கும். சொல்லிப் பாருங்கள், உங்களுக்கே புரியும். எனவே இத்தகைய சந்திப் பிழைகள் நேராமல் கவனித்துக் கொள்ளவேண்டும்.

இரண்டாம் வகை :

இயல்பாக	சந்தியுடன்
கோயில் கணக்கு	கோயிற்கணக்கு
நகரில் இருந்து	நகரிலிருந்து
மணி அளவில்	மணியளவில்
சில ஆண்டு	சிலவாண்டு
பெறுதற்கு என்றே	பெறுதற்கென்றே
முன்பிறப்பு	முற்பிறப்பு
மலர் ஒன்று	மலரொன்று
வாழை அடி	வாழையடி
பெயர் களுக்கு	பெயர்கட்கு
நல்நடத்தை	நன்னடத்தை
மதிப்பு உரிய	மதிப்புக்குரிய
ஆதலால்தான்	ஆதலாற்ருன்
ஓதாது உணர்தல்	ஓதாதுணர்தல்
பருவத்தில் தானே	பருவத்திற்ருனே
வேங்கடம் குமரி	வேங்கடங்குமரி
பாலும் சோறும்	பாலுஞ்சோறும்
நாள்தோறும்	நாடோறும்
அருள் பா	அருட்பா
தண் தமிழ்	தண்டமிழ்
முதல்நிலை	முதனிலை
அமைவு இன்று	அமைவின்று
கள்குடி	கட்குடி
நமது ஊரில்	நமதூரில்

இவ்விரு கட்டங்களில் கண்ட சொற்களில் எந்தக் கட்டத்தில் உள்ளதை எழுதினுலும் போதும் இக்காலத்துக்கு. முதல்

கட்டத்தில் உள்ள இரு சொற்களைச் சேர்த்து ஒலிக்கும்போது, இயல்பாக, இரண்டாவது கட்டத்தில் எழுதியிருப்பது போலவே ஒலிக்கின்றோம். அப்படியே யெழுதுவது நல்லதே. இலக்கணம் அங்ஙனந்தான் விதிக்கிறது. ஆனால், முதல் கட்டத்தில் இருப்பதுபோலப் பேசுவதும், எழுதுவதும் போதுமானது. தவறாகாது. எனவே இந்தச் சந்தியைப் பற்றிய கவலை வேண்டாம்.

இரண்டொரு செய்திகளைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். 'ஆண்டு' என்னும் சொல் வருடத்தைக் குறிக்கும் போது, 'ஆண்டு காலம்' என்று எழுதுவது சரி. 'ஆண்டுக் காலம்' தவறு. ஆண்டு அங்கே என்று பொருள்படும் இடங்களில் ஆண்டுக் கண்டது என்று எழுத வேண்டும். 'ஈண்டு' என்னும் சொல் இங்கே என்னும் பொருளுடையதால், 'ஈண்டுக் கேட்டனர்' என்றே எழுத வேண்டும். 'ஈண்டு கேட்டனர்' தவறு.

நாள்கள்	நாட்கள்
படைப்புகள்	படைப்புக்கள்
நூல்கள்	நூற்கள்
பெயர்களுக்கு	பெயர்கட்கு
அவர்களுக்கு	அவர்கட்கு

மேலே முதல் வரிசையில் கண்டவண்ணம் எழுதுவது சரி. இரண்டாவது வரிசையில் கண்டிருப்பன பிழை வடிவங்கள். 'கள்' விகுதியாக இருக்கும் இடங்கள் இவை. எனவே மிகவும் மாற்றம் அடைவதும் கூடாது. இயல்பாகவே இருக்க வேண்டும். 'கள்' ஒரு தனிச் சொல்லாக, மதுவைக் குறிப்பதாக, 'நாள்' என்னும் சொல்லுடன் சேர்ந்து வரும்போது 'நாட்கள்' என்று ஆகும். 'அன்று இறக்கிய கள்' என்பது அச்சொல்லுக்கு இங்கே பொருள்.

இது பற்றிப் புலவர்களுக்கு இடையே வேறுபட்ட கருத்து இருக்கின்றது என்றாலும் முதுபெரும் புலவர் மே. வி. வேணு கோபாலப் பிள்ளை போன்றவர்கள் மேற்கூறியதே சரி என்று ஆதாரங்களுடன் விளக்குவதைக் கேட்டிருக்கிறேன்.

இடையினம் வல்லினம் :

மதிப்புக்குரிய	மதிப்புக்கு உரிய
மதிப்புக்குறிய	மதிப்பு குறிய, மதிப்பில் மட்டமான
கோருகிறேன்	வேண்டிக் கொள்ளுகிறேன்

கோறுகிறேன்	(கோறல்-கொலை) கொலை செய்கிறேன்
அக்கரை	அந்தக்கரை (Bank)
அக்கறை	பற்று (Interest)

இச்சொற்களின் பொருள் வேறுபாடு அறிந்து பயன்படுத்த வேண்டும். ஒன்றுக்கு ஒன்றைப் பயன்படுத்தினால், பொருளே வேறுபட்டுவிடும். ஒரு மேல் அலுவலருக்கு ஒருவர் 'மதிப்புக் குறிய ஐய' என்று விளித்து மடல் எழுதினால் இதன் பொருள் 'மதிப்பில் மட்டமான ஐய' என்றேயாகும். இதைச் சுட்டிக் காட்டியபோது திடுக்கிட்டார்.

இடையின வல்லின வேறுபாட்டை மேலும் உணர, பின் வரும் வரிசைகளையும் கவனிக்க

கூரிய	கூரான
கூறிய	சொன்ன
எரி	தீப்பற்றி எரி
எறி	வீசு
கரி	அடுப்புக்கரி, நிலக்கரி
கறி	கடித்துச் சாப்பிடும் பண்டம்
மருப்பு	மலை
மறுப்பு	எதிர்த்துக் கூறல்
பொருப்பு	மலை
பொறுப்பு	Responsibility - Charge
எண்ணெய்	எள் நெய்
எண்ணை	Number - ஐ
இரத்தல்	பிச்சையெடுத்தல்
இறத்தல்	சாதல்
குரங்கு	ஒரு விலங்கு
குறங்கு	தொடை
உருத்தல்	துன்புறுத்தல்
உறுத்தல்	வறுவல் செய்தல் ; அடைவித்தல்
மரம்	செடி வகை
மறம்	அறத்துக்கு எதிர்

தவறான வழக்கு:

தவறு	சரி
சிலவு	செலவு (செல்லுதல்)
சில்லரை	சில்லறை (சில்லு சில்லுவாக அறுத்தல்)
துகை	தொகை (கொடுத்தல்)
சுவற்றில்	சுவரில் (சுவர் பகுதி)

கண்டருவி	கண்ணருவி (கண்கள் அராவுதல்)
வரையரை	வரையறை (வரை யறுத்தல்)
வகையரா	வகையறு (வகை அறுத்தல்)
கோர்வை	கோவை
கோர்த்து	கோத்து (கோ—பகுதி)
பூர்த்தல்	பூத்தல் (பூ பகுதி)
முயற்சித்தான்	முயன்றான் (முயல் பகுதி)
சம்மந்தம்	சம்பந்தம் (நல்ல மந்தம்)

பிற சில தவறுகள் :

எள்ளிலிருந்து எடுபடும் நெய் எண்ணெய் எனப்பெற்றது. முதலில் நம் நாட்டில் நெய்ப்புப் பொருள் விதைகளிலிருந்து எடுக்கப்பெற்றது. எள் விதையிலிருந்தே என்னும் உண்மையை இச்சொல் விளம்பிக் கொண்டிருக்கிறது. இதனை, 'எண்ணெய்' என்று சொல்வதே சரி. 'எண்ணை' தவறு.

அருகு - நெருங்கு. அருகாமை - நெருங்காமை. எனவே, அருகாமையில் என்பது தொலைவில் உள்ளதையே குறிக்கும். ஆனால் அருகில் இருப்பதைக் குறிக்க இச்சொல்லைப் பயன் படுத்துகிறோம். இது தவறு.

இல்லை, அல்ல

அவை இல்லை — அந்தப் பொருள்கள் குறித்த இடத்தில் இல்லை என்று பொருள்

அவை அல்ல—அந்தப் பொருள், நாம் எண்ணும் பொருள் அல்ல, வேறு பொருள் என்றாகும்.

ஆனால், இவ் வேறுபாடு தெரியாமல் பயன்படுத்துவது வழக்கமாகிவிட்டது. வேலன் இருக்கின்றான் — அவனைப் பார்த்து அவன் முருகன் அல்லன் என்று கூறுவதே பொருந்தும். அவன் முருகன் இல்லை என்பது தவறு.

அன்று, அல்ல, அல்லன், அல்லள், அல்லர் :

அது அன்று	அவள் அல்லள்
அவை அல்ல	அவர் அல்லர்
அவன் அல்லன்	

இவ் வேறுபாட்டைச் சிறிதும் உன்னாமலே நாம் 'அல்ல' என்னும் சொல்லை எல்லா இடங்களிலும் பயன்படுத்துகிறோம். அது அல்ல, அவன் அல்ல, அவள் அல்ல, அவர் அல்ல என்பன தவறு.

பிழை	சரி
அதினல்	அதனல்
பேஜார், பேசார்	பேய்ச்சுக்கள் (பேய்ச்சார்ந்த நிலை, பேயினல் பீடிக்கப்பட்ட நிலை)
காக்ஷி	காட்சி (காண் பகுதி)
மாக்ஷி	மாட்சி (மாண் பகுதி)
மண்டபம்	மண்டகம் (மண்டுகிற, மக்கள் பலவகை நெருங்குகிற இடம்) கல்வெட்டில் 'மண்டகம்' என்ற சொல்லே வழங்கப் பெற்றிருக்கிறது. ' 'மண்டகப்படி' என்னும் சொல்லையும் காண்க.

பொருத்தமான சொற்கள் :

சரி	தவறு
குழப்பம் ஏற்பட்டது	குழப்பம் நிலவிற்று
தீமை செய்தான்	தீமை புரிந்தான்
துன்பம் நேர்ந்தது	துன்பம் வாய்த்தது
நல்லது செய்ய ஊக்கினன்	நல்லது செய்யத் தூண்டினன்
தமிழ் பயன்படுத்தப்பெற்றது	தமிழ் புகுத்தப்பெற்றது
தண்டனை விதித்தார்	தண்டனை அளித்தார்
கோரக்காட்சி தந்தது	கோரக்காட்சி அளித்தது
கெட்டுவிட நேரும்	கெட்டுவிட வாய்ப்புண்டு

1-ம், 1-ஆம், 1-வது, 1-ஆவது, 1-ல், 1-இல் :

1-ம், 2-ம், 3-ம், நல்ல நாள்கள் என்னும் இடத்தில் 1-ம், 2-ம், 3-ம் என்று பயன்படுத்தலாம். 1-ஆம் நாள், 2-ஆம் நாள் என்று சொல்லும்போது, அப்படியே 1-ஆம், 2-ஆம் என்று எழுத வேண்டும். அங்ஙனமே 1-ஆவது, 2 ஆவது என்று எழுதுவதே சரி. 1-வது, 2-வது என்று நாம் உச்சரிப்ப தில்லையே. எனவே அது தவறு. 1-ல் என்பதை 1-இல் என்று எழுதுவது வேண்டா. '1' இதனை 'ஒன்று' என்று உச்சரிக்கிறேம். பக்கத்தில் 'ல்' சேர்த்தால் சாலும். '1-இல்' என்று எழுதினல் 'ஒன்று இல்' என்று உச்சரிக்க வேண்டி வரும்.

தொகுப்பு :

பொதுவாக நேரும் பிழைகளை ஒருவாறு, ஓரளவு, மேலே கூறினேன். முறைப்படுத்தியும், பெருக்கியும் கண்டுகொள்க.

— — —

செய்திகளும் குறிப்புகளும்

தூத்துக்குடியில் வ. உ. சி. மகளிர் கல்லூரி திறப்புவிழா

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் பெயரில் ஆண்கள் கல்லூரியினைத் திரு ஏ. பி. சி. வீரபாகு, பி. ஏ. அவர்கள் தொடங்கிச் சிறப்பாக நடத்தி வருவதை அன்பர்கள் அறிவர். மகளிர் கல்லூரி இல்லாத குறையினைப் போக்குவான் கருதிச் செய்தக்க செய்யுந் திறன் மிக்க திரு. ஏ. பி. சி. வீரபாகு, பி. ஏ., அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக இப்பொழுது தூத்துக்குடியின் விரிவுப் பகுதியான திருமந்திர நகரில் திரு. வ. உ. சி. அவர்கள் பெயரில் மகளிர் கல்லூரியும் அமைந்துள்ளது.

இக் கல்லூரியின் திறப்பு விழா 30-6-74இல் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்குத் தூத்துக்குடி நகராட்சித் தலைவர் திரு. எம். எஸ். சிவசாமி தலைமை தாங்கினார். கல்லூரியின் தாளாளர் திரு. ஏ பி.சி. வீரபாகு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கல்லூரியினைத் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு அமைச்சர் ஆதித்தனார், திரு நித்தியானந்தம், திரு முருகானந்தம் எம். பி. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழில் அருச்சனை செய்ய இடைக்காலத் தடை

தமிழ் நாட்டிலுள்ள திருக்கோவில்களில் 1971 ஆம் ஆண்டில், வடமொழி உட்படப் பிற மொழிகளுடன் தமிழ் மொழியிலும் அருச்சனை செய்யலாம் என 12 ஆயிரம் கோயில்கட்குத் தமிழக அரசு ஆணை பிறப்பித்திருந்தது.

அடுத்து 1973 ஆம் ஆண்டில் தமிழில் மட்டுமே அருச்சனை செய்ய வேண்டும் என அறநிலையத்துறை ஆணையர் ஓர் ஆணையைப் பிறப்பித்தார். இந்த இரண்டு ஆணைகளையும் எதிர்த்து இராமேசுவரம் துளசி பாபா மண்டபத்தின் தலைவர் கல்யாணதாஸ் என்பவரும் வேறு பல அருச்சகர்களும் தலைமை நீதிமன்ற (Supreme court)த்தில் தமிழ் அருச்சனையை எதிர்த்து மேல் முறையீடு (writ) செய்தனர்.

தலைமை நீதி மன்றம் இவ்வழக்கினை ஆய்ந்து வடமொழியில் அருச்சனை செய்வதுதான் முறையானது என்றும், தமிழில் அருச்சனை செய்வது இந்து பக்தர்களின் வழிபாட்டு உரிமையில் தலையிடுவதாகும் என்றும், அதனால் தமிழக அரசின் ஆணைகளுக்கு இடைக்காலத் தடை விதிப்பதாகவும் அறிவித்துள்ளது.

கச்சத் தீவுச் சிக்கல்!

இந்தியத் துணைக் கண்டத்தின் தென்கோடியில் இலங்கைக்கும் தமிழகத்திற்கு மிடையே உள்ளது கச்சத்தீவு என்னும் சிறுதீவு. இத்தீவு மனிதர் நிலைத்து வாழும் பகுதியாக இல்லாவிடினும் இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்ததொரு பகுதியாகப் பண்டுதொட்டு இருந்து வருகிறது. சுருங்கச் சொல்ல வேண்டுமானால் இத்தீவு தமிழகத்தின் ஒரு பகுதியாகும். இதனைக் கடந்த 28-6-74இல் இந்தியப் பேரரசு சில அரசியல் காரணங்களுக்காக ஸ்ரீலங்காவுக்கே உரிமையாக்குவதென்ற முடிவுக்கு வந்து இலங்கை அரசுடன் ஓர் ஒப்பந்தமும் செய்து கொண்டு விட்டது. இரு நாடுகளின் தலைமை அமைச்சர்களும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு விட்டனர். இந்நிலையில் இந்தியாவின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு வந்த இத்தீவினை இலங்கைக்கு உரிமையாக்கியது பற்றி அரசியல் தலைவர்கட்கிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

தமிழக அரசு இதற்குத் தனது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளது. எனவே கச்சத்தீவு இந்தியாவுக்கா இலங்கைக்கா? யாருக்குச் சொந்தம் என்னும் சிக்கல் எழுந்துள்ளது.

“வலைஞர் நெஞ்சில் கலைஞர்” நூல் வெளியீட்டு விழா

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொன் விழாத் தொடர்பாக நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற கவியரங்கத்தில் பாடிய பாடல்களின் தொகுப்பு நூலாகிய “வலைஞர் நெஞ்சில் கலைஞர்” என்னும் நூல் வெளியீடு கடந்த 12-6-74இல் சென்னை எழும்பூர் ஒயிட் மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் வலம்புரி ஜான் அவர்களால் தொகுக்கப் பெற்ற இந்நூலினைத் தமிழக அமைச்சர் மாண்புமிகு க. இராசாராம் அவர்கள் வெளியிட, சாந்தோம் பாதிரியார் மறைத்திரு அடைக்கலம் அவர்கள் பெற்றுக் கொண்டார். திருவாசகமணி கே. எம். பால சுப்பிரமணியம், பல்கலைக்கழகப் பேராசிரியர் பாலசுப்பிரமணியம், டாக்டர் ஔவை சு. நடராசன், புலவர் பொன்னி வளவன், புலவர் ஆடலரசு, கவிஞர் குடியரசு செல்வி மீனாட்சி ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு தொகுப்பாசிரியரைப் பாராட்டிப் பேசினர்.

கலைஞர் உள்ளத்தைக் கவர்ந்த கழக நூல்கள்

பாளையங்கோட்டைச் சிறையிலிருந்தபோது தாம் படித்த நூல்களைப் பற்றி 12-4-74இல் ‘நெஞ்சுக்கு நீதி’ என்ற தலைப்பில் தினமணிக்கதிரில் எழுதியதை அடியிற் காண்க.

“திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் மூலமாகப் பல புத்தகங்களை அப்போது படித்துச் சுவைத்திடும் வாய்ப்புக் கிட்டியது எனக்கு.” —டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்.

பெருமழைப்புலவர் பொ. வே. சோமசுந்தரனார் புலவர் தேர்வில் பெற்ற சான்றிதழ் கிடைத்த செய்தி

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 4 ஆண்டுகள் படித்து 1936இல் புலவர் தேர்வில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ச்சி பெற்று வாங்கிய சான்றிதழைத் தமக்கு அஃதெங்ஙனம் பயன்படப் போகிறதென்று சொல்லித் தம்முடன் படித்த நண்பர் கீரப்பாளையம் புலவர் திரு. ஜெ. சடகோப ராமானுசம் அவர்களிடம் கொடுத்து விட்டனராம். பெருமழைப் புலவர் அவர்கள் 1972இல் இறையடி சேர்ந்த பின் சான்றிதழினைப் பற்றிய செய்தி புலவர் திரு சாந்த சுந்தரனார் வழி யறிந்து அதனைப் பெறக் கருதினேன்.

மே 27இல் நெல்லையில் நடைபெற்ற கழகச் செயற் கூட்டத்திற்குச் சென்று சென்னைக்குத் திரும்பும் வழியில் தில்லையில் கூத்தப் பெருமானை வணங்கி விட்டு, நேராகக் கீரப்பாளையத்திலுள்ள புலவர் சடகோப ராமாநுசம் அவர்கள் இல்லஞ் சென்று சான்றிதழைப் பெற்று வந்தேன். சான்றிதழோடு புலவர் அவர்களது நட்புக் கிடைத்தது பெரும் பேறாகும்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்திற்காக
சென்னை-600001, 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில்
திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

தாயுமான அடிகள் திருப்பாடல்கள் :

17ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த சமயப் பெரியோர்களுள் தாயுமானவடிகள் ஒரு சிறந்த மெய்யறிவாளராவர். இவர்தம் பாடல்கள் மெய்யறிவுக் கருத்துகளையும், சீர்திருத்தக் கருத்து களையும் கொண்டவை. அவர் ஏறக்குறைய 1500 பாடல்களை அருளிச் செய்துள்ளார். அழகிய கையடக்கமான பதிப்பாக வெளியிடப்பெற்றுள்ள இந்நூலில் தாயுமான அடிகளின் வரலாறு, பாடல் சிறப்பு இன்னபிற செய்திகளும் அடங்கி யுள்ளன. ரூ. 5 00

திருவாசகம்-நீத்தல் விண்ணப்பம் - உரை

—புலவர் ந.ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.

திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய நீத்தல் விண்ணப்பம் பத்திச் சுவை நிறைந்தது. பொருட் செறிவுடையது. இதற்குப் புலவர் முருகவேள் அவர்கள் அரிய பொழிப்புரையும் விளக்க வுரையும் எழுதியுள்ளார்கள். சைவ மெய்யன்பர்களும், புலவர் பட்டம் பெறுவோரும் படித்துச் சுவையும் பயனும் காண வேண்டிய நூலாகும். ரூ. 4 00

கல் எண்ணெயின் கதை (பெட்ரோலியம்)

—என். கே. வேலன், பி. ஏ.

மண்ணிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் மக்கள் வாழ்க்கைக்கு எத்துணை இன்றியமையாதது என்பதை விளக்கு கிறது இந்நூல். கல் எண்ணெய் உற்பத்தி—அதனை எடுக்கும் முறை—எண்ணெய்த் தொழில்—பிளாஸ்டிக்—பெட்ரோலியம் ஆகியனவற்றல் விளையும் அற்புதங்கள் இன்னபிற செய்திகள் இனிய எளிய தமிழில் கூறும் அரிய நூல். ரூ. 3 75

தாள் பற்றிய கதை (காகிதம்) (அச்சில்)

VOICE OF VALLALAR (in English)

By Rao Sahib S. R. V. Arasu, B.A. 5 00

கிறக்கும் உச்சி (தமிழாக்கம்)

—கு. பரமசிவன், எம். ஏ. 6 00

காக்கைபாடினியம் (விளக்க உரையுடன்)

—புலவர் இரா. இளங்குமரன் 12 00

திருவருட்பாப் புகழ்த்திரட்டு (கையடக்கம்) 4 00

பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள் ,, 4 00

திருவாசகத் திருப்பாடல்கள் ,, 4 00

பதிவு எண் : M. 4899

பிற பதிப்பாளரின் வெளியீடுகள்

தமிழ் வாழ்க்கை வரலாற்று இலக்கியம் —டாக்டர் சாலினி இளந்திரையன்	10	00
இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கருவூலம் —ஆர். பி. எம். கனி	10	00
மாநில சுயாட்சி—முரசொலி மாறன்	15	00
தேனீர்—டி செல்வராஜ்	10	00
மாணிக்கவீணை—தபஸ்வி	4	75
மோகனா—வாசவன்	5	50
புதிய தொடக்கங்கள்—ரெ கார்த்திகேசு	3	25
திரைகளுக்கு அப்பால்—இந்திரா பார்த்தசாரதி	5	50
அதற்கு விலை இல்லை—மா. இராமலிங்கம்	5	25
சுதந்திரச் சிந்தனை—ஜெயகாந்தன்	5	00
ஜெயகாந்தன் சிறுகதைகள்	5	25
தோணி வருகிறது—ஈரோடு தமிழன்பன்	3	50
நிலா நானூறு—கவிஞர் ஆற்றலரசு	12	50
செவ்வைச் சூடுவார் இயற்றிய பாகவதம் —குறிப்புரை டாக்டர் உ. வே. சா. (பாகம் 1, 2)	15	00
இராஜ நாயகம்—வண்ணக்களஞ்சியப் புலவர்	10	00
ஒரு புளியமரத்தின் கதை—சுந்தர ராமசாமி	5	00
கவிமணியின் வாழ்வும் கவிதை வளமும் —கவிஞர் தே. ப. பெருமாள்	5	00
நாட்டுப்புற இலக்கியப் பார்வைகள் —பதிப்பாசிரியர் வி. மி ஞானப்பிரகாசம் —க. ப. அறவாணன், M. A., M. Litt.	6	00
இலக்கியத்தில் காதல்—சண்முகதாசன்	4	50
தமிழும் தேனும்—வெ. வரதராசன், M. A.	2	50
கட்டுரை எழுதுதல் எப்படி ?—க. ப. அறவாணன்	2	00
புரட்சிப் பொறிகள் ,,	4	00
பெண் மொழி ,,	2	50
Research Paper on Tamilology ,,	6	00
New Writing in India—Adil Jussawala	9	00
Valmiki Ramayanam—Sanskrit Text with Tamil translation 8 Vols. (New Edition)	105	00
Srimad Bhagavatham—Sanskrit Text with Tamil translation 8 skandas	70	00
Valmiki Ramayanam—Tamil Prose 5 Vols	50	00

அப்பர் அச்சகம், சென்னை-600 001.